


30 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 பாலம்: 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2020

# கனடாவில் இடைத்தேர்தல்களும் மாகாண அரசுத் தேர்தல்களும்

கோவிட்-19 நோய்த் தொற்று பரவிக் கொண்டிருந்தாலும் ஒக்ரோபர் மாதப் பிற்பகுதியில் கனடாவில் நான்கு தேர்தல் கள் நடைபெற்றன. 2020 ஒக்ரோபர் 26இல் ரொறொன்ரோவில் கனடிய மத்திய அரசிற்கான இரண்டு இடைத் தேர்தல்கள் நடைபெற்றன. ஒக்ரோபர் 24இல் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தின் சட்டசபைக் கான தேர்தலும் ஒக்ரோபர் 26இல் சஸ்கச் சுவான் மாகாணத்தின் சட்டசபைக்கான தேர்தலும் நடைபெற்றன.

ரொறொன்ரோ மத்தி தொகுதிக்கான இடைத் தேர்தலில் லிபரல் கட்சியைச் சேர்ந்த Marci Ien 42% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இது லிபரல் கட்சியின் முன்னாள் நிதியமைச்சர் Bill Morneau இனுடைய தொகுதியாகும். இத் தொகுதியில் இம்முறை பசுமைக் கட்சியின் தலைவர் Annamie Paul போட்டியிட்டிருந் தார். இவர் 32.7% வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றார். இத் தொகுதியில் இம்முறை 31%ஆனோரே வாக்களித்திருந்தனர்.

| ரொறொன்ரோ மத்தி தொகுதிக்கான இடைத்தேர்தல் | | | |
|---|---|---|---|
| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | % |
| லிபரல் கட்சி | Marci Ien | 10,579 | 42.0 |
| பசுமைக் கட்சி | Annamie Paul | 8,250 | 32.7 |
| புதிய ஜனநாயகக் கட்சி | Brian Chang | 4,280 | 17.1 |
| பழமைவாதக் கட்சி | Benjamin Gauri Sharma | 1,435 | 5.7 |
| மற்றயவை | | 659 | 2.6 |
| செல்லுபடியான வாக்குகள் | | 25,203 | |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 81,400 | |

அட்டவணை -1

ரொறொன்ரோ மத்தியில் போட்டியிட்ட பசுமைக் கட்சியின் தலைவர் Annamie Paul, கடந்த முறை 7% வாக்குகளைப் பெற்று நாலாம் இடத்தில் இருந்தார். அவர் இம்முறை 32.7% வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்துக்கு வந்திருந் தார். பசுமைக் கட்சியின் முன்னாள் தலைவி எலிசபெத் மே கேட்டுக்கொண்ட மாதிரி புதிய ஜனநாயகக் கட்சி தனது வேட்பாளரை தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலத்தியிருந்திருந்தால் இம்முறை இத்தொகுதியில் பசுமைக் கட்சியின் புதிய தலைவர் Annamie Paul தெரிவு செய்யப்பட்டிருப்பார். பசுமைக் கட்சிக்கும் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் சேர்த்து இத்தொகுதியில் 49.7% வாக்குகள் கிடைத்திருந்தன.




ரொறொன்ரோ மத்தியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்டுத் தெரிவான Marci Ien ரொறொன்ரோவில் 1969 ஜூலை 29இல் பிறந்தவர். இவர் Ryerson பல் கலைக்கழகத்தில் ஊடகவியல் துறையில் படித்துப் பட்டம் பெற்றவர். இவர் ஊடகவியலாளராகப் பல தொலைக்காட்சிச் சேவைகளில் பணிபுரிந்திருந்தார். Ryerson பல்கலைக்கழகத்திலும் பகுதிநேர விரி வுரையாளராக இருக்கின்றார். இவருடைய தகப்பனார் Trinidadஇல் இருந்து கனடா விற்குப் புலம்பெயர்ந்து ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் பணிபுரிந்தவர். Marci Ienஇற்கும் அவர் கணவர் Lloyd Exeterஇற்கும் Blaize மற்றும் Dash என இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

யோர்க் மத்தி தொகுதிக்கான இடைத் தேர்தலில் லிபரல் கட்சியைச் சேர்ந்த Ya'ara Saks 45.7% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இது லிபரல் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர் Michael Levitt இனுடைய தொகுதி யாகும். இத்தொகுதியில் இம்முறை 26% ஆனோரே வாக்களித்திருந்தனர்.

பழமைவாதக் கட்சித் தலைமைப் பதவிக்கு Andrew Scheerஉடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்து பழமைவாதக் கட்சி யிலிருந்து பிரிந்து மக்கள் கட்சியை ஆரம்பித்த Max Bernier யோர்க் மத்தி தொகுதியில் போட்டியிட்டிருந்தார். இத் தொகுதியில் லிபரல் கட்சிக்கும் பழமை வாதக் கட்சிக்கும் பலத்த போட்டி நிலவியது. இறுதியில் லிபரல் கட்சியைச் சேர்ந்த Ya'ara Saks 701 வாக்குகளாலேயே வெற்றி பெற்றிருந்தார். மக்கள் கட்சித் தலைவர் பழமைவாதக் கட்சியின் வாக்கு களை பிரித்திராவிட்டால் இத்தொகுதியில் பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த Julius Tiangsan தெரிவு செய்யப்பட்டிருப்பார்.

யோர்க் மத்தி தொகுதியில் லிபரல் கட்சி யின் சார்பில் போட்டியிட்டுத் தெரிவான Ya'ara Saks சொந்த நிறுவனம் ஒன்றை நிர்வகித்து வருகிறார். இரண்டு பதின்ம வயதுப் பெண் பிள்ளைகளின் தாயாரான இவர் McGill பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்துறையில் 1995இல் கலைமாணி பட்டம் பெற்றவர். பின்னர் இஸ்ரேல் நாட்டின் ஜெருசலேம் நகரில் உள்ள Hebrew பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் மற்றும் சாமர்த்தியம் பற்றிய துறையில் (International relations and Diplomacy) முதுமாணிப் பட்டம் பெற்றவர்.

| யோர்க் மத்தி தொகுதிக்கான இடைத்தேர்தல் | | | |
|---|---|---|---|
| கட்சி | வேட்பாளர் | வாக்குகள் | % |
| லிபரல் கட்சி | Ya'ara Saks | 8,253 | 45.7 |
| பழமைவாதக் கட்சி | Julius Tiangson | 7,552 | 41.8 |
| புதிய ஜனநாயகக் கட்சி | Andrea Vasquez Jimenez | 1,046 | 5.8 |
| மக்கள் கட்சி | Max Bernier | 642 | 3.6 |
| பசுமைக் கட்சி | Sasha Zavarella | 461 | 2.6 |
| மற்றயவை | | 104 | 0.6 |
| செல்லுபடியான வாக்குகள் | | 18,058 | |
| வாக்களிக்கத் தகுதி பெற்றோர் | | 70,434 | |

அட்டவணை -2

## பிரிட்டிஸ்கொலம்பியா மாகாண அரசுத் தேர்தல்

கோவிட்-19 தொற்றுநோய்ப் பரம்பலின் போது பிரிட்டிஸ்கொலம்பியா மாகாண சட்டசபையை செப்ரெம்பர் 21ஆம் திகதி திடீரெனக் கலைத்து மாகாண சட்ட சபைக்கான 42ஆவது தேர்தலை 2020 ஒக்ரோபர் 24இல் நடத்தப் போவதாக முதல்வர் John Horgan தெரிவித்திருந்தார்.

பிரிட்டிஸ்கொலம்பியா மாகாணத்தை

(தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)




























# இந்தியாவின் தலைநகர் டெல்லியின் வரலாறும் அதன் சிறப்புகளும்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

பிரிட்டிஷ் பேரரசர் ஜோர்ஜ் தலைநகரை கல்கத்தாவிலிருந்து டெல்லிக்கு மாற்றுவதாக அறிவித்ததுடன் டெல்லியை நவீனமாக வடிவமைக்கும் பணிகளின் பொறுப்பை பிரிட்டிஷ் கட்டிடக்கலை வல்லுநர்களான சேர் எட்வின் லூட்டியன் மற்றும் சேர் ஹர்பெர்ட்டு பேக்கர்க்கும் கொடுக்கப்பட்டது. டெல்லியை நவீனமைய மாக்கும் பணியை செய்து முடிப்பதற்கு இருபது ஆண்டுகள் ஆனது (1911-1931). புதியதாய் உருவாக்கப்பட்ட மாநகருக்கு புது டெல்லி என்று பெயர் சூட்டப்பட்டு 1931ஆம் ஆண்டு பெப்ரவரி 13ஆம் திகதி பிரிட்டிஷ்-இந்திய தலைமை ஆளுனர் இர்வின் பிரபுவினால் தொடக்கி வைக்கப் பட்டது. 1947ஆம் ஆண்டு ஒகஸ்ற் 15ஆம் திகதி இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் மீண்டும் டெல்லி இந்தியாவின் தலைநகரமாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

டெல்லி நகரம் இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. அதாவது ஷாஜஹானால் உருவாக்கப்பட்ட ஷாஜஹானாபாத்தை பழைய டெல்லி என்றும் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நவீனமாக வடிவமைக் கப்பட்ட பகுதியை புதிய டெல்லி என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தியாவின் தலைநகரான டெல்லி வடஇந்தியாவில் யமுனை ஆற்றின் மேற்கு கரையில் அமைந்துள்ளது. இதன் மூன்று பக்கங்கள் ஹரியான மாநிலத்தாலும் மற்றும் கிழக்கு பக்கம் உத்தரப்பிரதேசத்தாலும் சூழப் பட்டுள்ளது. இந்த நகரம் 1484 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் சுமார் 30



மில்லியன் மக்கள் தொகையுடன் பல-கலாச்சாரம் மற்றும் பன்மொழியியல் நகரமாக விளங்குகின்றது. மேலும் டெல்லி 1956ஆம் ஆண்டு யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டு தேசிய தலைநகரம் என்று அழைக்கப்படுகின்றது.

புது டெல்லியிலிருந்து 24 கிலோமீற்றர் தொலைவில் இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் மூன்று முனையங்களுடன் செயல்படுகின்றது. முதல் மற்றும் இரண்டாம் முனையங்கள் உள்நாட்டு விமான பயன்பாட்டுக்கும் மேலும் மூன்றாவது முனையம் சர்வதேச விமானங்களின் பயன்பாட்டுக்காவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைப்போல், இந்தியன் ரயில் சேவை இந்தியாவின் அனைத்து முக்கிய நகரங்களையும் தலைநகர் டெல்லியுடன் இணைக்கின்றது. டெல்லியில் ஐந்து முக்கியமான ரயில் நிலையங்கள் உள்ளன. அவை யாதெனில் புதுடெல்லி, பழைய டெல்லி, நிஜாமுதீன், ஆனந்த் விஹார் மற்றும் சாராய்-ரோஹில்லா.



டெல்லியில் முக்கியமாக சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்கள் யாதெனில். செங்கோட்டை, ஹுமாயூன் கல்லறை (தாஜ்மஹாலின் முன்னோடி), குதுப்மினார் (உலகத்தின் உயரமான கல் கோபுரம்), டெல்லி துருப்பிடிக்காத இரும்புத்தூண், தாமரை கோயில், அக்ஷர்தாம் கோயில் (உலகத்தின் மிகப்பெரிய இந்து கோயில்), இந்தியா கேட் - இந்திய போர் நினைவுச் சின்னம், ஜனாதிபதி மாளிகை, நாடாளுமன்றம், லக்ஷ்மி-நாராயண் கோயில், மலை முருகன் கோயில், சீக்கியர்களின் தங்க கோயில், தேசிய அருங்காட்சியகம், மாகாத்மா காந்தி சமாதி, இந்திராகாந்தி வீடு, ஜவஹர்லால் நேரு வீடு, கிருஷ்ணரின் தங்கை யோக்மாயா தேவி கோயில் (சக்திபீடம்), காத்யானி தேவி கோயில் (சக்திபீடம்).

டெல்லிக்கென்று சில தனிச்சிறப்புகள் உள்ளன. அவை (1) உலகின் அதிக மக்கள் தொகை (மூன்று கோடி) கொண்ட இரண்டாவது நகரமாகும். (2) இங்குள்ள மெட்ரோ ரயில் அமைப்பு (389 கிமீ). உலகின் இரண்டாவது சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (3) பொது போக்குவரத்து பேருந்து முழுவதுமாக இயற்கை எரிவாயு மூலமாக இயக்கப்படுகின்றது. (4) இந்திரா காந்தி சரவதேச விமான நிலையம் உலகின் நான்காவது சிறந்த விமான நிலையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (5) உலகத்தில் அதிக எண்ணிக்கையிலான பறவை இனங்கள் உள்ள தலைநகரங்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது. (6) நிலப்பரப்பில் 20 சதவீதம் பசுமைநிறைந்த காடுகளால் மூடப்பட்டு உலகின் பசுமையான நகரங்களில் ஒன்றாக உள்ளது. (7) ஆசியா கண்டத்தில் மிகப்பெரிய மொத்த வியாபார சந்தைகளான: காய்கறி-பழங்கள் (ஆஜாத்பூர்), மசலா-பருப்பு வகைகள் (காரி-பாவ்லி) மற்றும் கணினி-அதன் பாகங்கள் (நேருபிளேஸ்) டெல்லியில்

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# கனடாவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆண்டுகொண்டிருந்த சிறுபான்மை அரசான புதிய ஜனநாயகக் கட்சியின் அரசு 2017ஆம் ஆண்டிலேயே தெரிவு செய்யப்பட்டது. அடுத்த தேர்தல் 2021 மே 12இல் தான் நடைபெற வேண்டிய நிலையில் தற்போது புதிய ஜனநாயகக் கட்சி மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ள காலத்தில் தான் தேர்தலை நடத்துவதன்



மூலம் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் மாகாண முதல்வர் John Horgan சட்டசபையைக் கலைத்தார்.

2017 மே இல் நடைபெற்ற பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணசபைத் தேர்தலில் சட்டசபையில் உள்ள 87 தொகுதிகளில் லிபரல் கட்சி 43 தொகுதிகளிலும், புதிய ஜனநாயக் கட்சி 41 தொகுதிகளிலும், பசுமைக் கட்சி 3 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. ஆட்சியமைக்கத் தேவையான பெரும்பான்மையான 44 ஆசனங்களை ஒரு கட்சியும் பெறாதபடியால் புதிய ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் சேர்ந்து ஒரு சிறுபான்மை அரசை அமைத்தது. இந்தச் சிறுபான்மை அரசு புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவரான John Horgan ஐ முதல்வராகக் கொண்டு மூன்று வருடங்களும் நான்கு மாதங்களும் பதவியிலிருந்துள்ளது.

2017இல் தேர்தலில் போட்டியிட்ட தலைவர்கள் தற்போது லிபரல் கட்சியிலும் பசுமைக் கட்சியிலும் இல்லை. லிபரல் கட்சி தனது புதிய தலைவராக Andrew Wikinsonஐ 2018 பெப்பிரவரி 3இல் தெரிவு செய்தது. பசுமைக் கட்சி தனது புதிய தலைவராக Sonia Furstenauஐ 2020 செப்ரெம்பர் 14இல் தெரிவு செய்தது. பசுமைக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு நடைபெற்று ஒரு வாரத்தில் சட்டசபை கலைக்கப்பட்டது.

கோவிட்-19 தொற்றுநோய்ப் பரம்பலை மற்றைய சனத்தொகை கூடிய மாகாணங்களை விட திறமையாகக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததால் முதல்வர் John Horgan பிரிட்டிஷ்கொலம்பியா மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தார். கடந்த மூன்று வருடங்களாகப் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பொருளாதாரம் விரைவாக வளர்ச்சியடைந்து வந்தது. முன்னைய காலங்களில் பிரிட்டிஷ் கொலம்பியாவை ஆட்சி செய்த புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர்களைப் போலல்லாது John Horgan ஊழலற்ற அரசை நடத்தி வந்துள்ளார். அத்துடன் பசுமைக் கட்சித் தலைவராகப் பதவியேற்ற Sonia Furstenau தனது கட்சியைப் பற்றி அறிந்து எல்லா தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவிக்கக்கூடப் போதிய அவகாசம் கொடுக்காமல் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி காரணங்களால் புதிய ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை ஆசனங்களை இத் தேர்தலில் பெறுவது நிச்சயம் என எல்லா ஊடகங்களும் தெரிவித்திருந்தன.

அதேபோல் தேர்தல் முடிவுகள் ஒக்ரோபர் 24இல் வெளிவந்தபோது புதிய ஜனநாயகக் கட்சி 55 தொகுதிகளிலும்,



லிபரல் கட்சி 29 தொகுதிகளிலும், பசுமைக் கட்சி 3 தொகுதிகளிலும் முன்னணியில் நிற்கின்றன.

வழமைக்கு மாறாக இம்முறை தபால் மூலம் வாக்களித்தோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். 720,000 பேர் இம்முறை தபால் மூலம் வாக்களிப்பதற்காக வாக்குச்சீட்டுகளைப் பெற்றிருந்தனர். இது கிட்டத்தட்ட வாக்களித்தோரில் 35% ஆகும். வழமையில் 1%ஆன வாக்காளர்களே தபால் மூலம் வாக்களிப்பர். கோவிட்-19 நோய்ப் பரம்பலே இதற்கு முக்கிய காரணமாகும்.

தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணத் தொடங்க தேர்தல் முடிவடைந்து 13 நாட்கள் எடுக்கும். முதலில் தபால் மூலம் வழங்கப்பட்ட வாக்குகள் அவற்றிற்குரிய வாக்காளரின் தொகுதிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கு அவர் நேரடியாக வாக்களிக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே எண்ணப்படும். இம்முறை இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டு வாக்குகள் எண்ண 13 நாட்களுக்குக் கூட எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை சேர்க்கப்பட்ட பின்னரே அத்தொகுதியில் வெற்றி பெற்றவர் உறுதி செய்யப்படுவார். இதனால் இந்தத் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படும்வரை தேர்தலில் தோல்வியுற்றதாக தான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என லிபரல் கட்சித் தலைவர் Andrew Wikinson தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சி 55 ஆசனங்கள் கிடைக்கும் நிலை தற்போது உள்ளபடியால் தபால் மூலம் அளிக்கப்படும் வாக்குகள் இதில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர மாட்டாது என ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அறுதிப் பெரும்பான்மைக்கு 44 ஆசனங்கள் மட்டுமே தேவை என்றபடியால் CBC மற்றும் CTV ஊடகங்கள் ஏற்கனவே பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் புதிய ஜனநாயகக் கட்சி பெரும்பான்மை அரசை அமைக்கும் என உறுதி செய்து விட்டனர். ஊடகவியலாளர்களின் கணிப்பின்படி ஆகக்கூட 5 ஆசனங்கள் மட்டுமே தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளால் மாறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் வாக்களிக்கத் தகுதியானோர் 3,485,858 ஆகும். இதில் 1,208,326 பேர் தேர்தலில் நேரடியாக வாக்களித்துள்ளனர். தபால் மூலம் வாக்களிப்பதற்காக வாக்குச்சீட்டுகளைப் பெற்ற 720,000 பேரில் கிட்டத்தட்ட 600,000 வாக்குகள் செல்லுபடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிலர் வாக்குச்சீட்டைப் பெற்றிருந்தாலும் வாக்குகளைத் தபால் மூலம் அளித்திருக்கமாட்டார்கள். அதைவிட பிந்திக் கிடைத்த வாக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இதனாலேயே வாக்களித்தோரின் எண்ணிக்கை 1,808,326 ஆக கணிக்கப்படுகிறது. இதனால் இம்முறை நடைபெற்ற தேர்தலில் வாக்களித்தோர் 51.8%ஆகக் கருதப்படுகிறது. 2017ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் 61.2%ஆனோர் வாக்களித்திருந்தனர்.

தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளைத் தவிர்த்துப் பார்க்கையில் புதிய ஜனநாயகக் கட்சி 45% வாக்குகளையும், லிபரல் கட்சி 35% வாக்குகளையும், பசுமைக் கட்சி 15% வாக்குகளையும் பெற்றுள்ளன.


### சஸ்கச்சுவான் மாகாண அரசுத் தேர்தல்

பிரிட்டிஷ்கொலம்பியா போல் அல்லாது சஸ்கச்சுவான் மாகாணம் தனது சட்டப்படி நியமிக்கப்பட்ட தேர்தல் நடத்தும் திகதியான 2020 ஒக்ரோபர் 26இல் 29ஆவது மாகாண சட்டசபைத் தேர்தலை நடத்தியது. கடந்த மூன்று தடவையும் சஸ்கச்சுவான் கட்சிதான் பெரும்பான்மையைப் பெற்று அங்கு ஆட்சி நடத்தி வருகிறது. சஸ்கச்சுவான் மாகாணச் சட்டசபையில் 61 தொகுதிகள் இருக்கின்றன. அவற்றில் குறைந்தது 31 ஆசனங்களைப் பெறும் கட்சியே பெரும்பான்மை அரசை அமைக்கும். கலைக்கப்பட்ட சஸ்கச்சுவான் சட்டசபையில் சஸ்கச்சுவான் கட்சியைச் சேர்ந்த 51 பேரும் புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 10 பேரும் உறுப்பினர்களாக இருந்தனர். சஸ்கச்சுவான் கட்சியின் தலைவராகவும் கடந்த மூன்று முறையும் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த முதல்வருமான Brad Wall தலைவர் பதவியிலிருந்து விலக, சஸ்கச்சுவான் கட்சி, புதிய தலைவராக Scott Moeஐ 2018 ஜனவரி 27இல் தெரிவு செய்திருந்தது.

ஒக்ரோபர் 26இல் நடைபெற்ற சஸ்கச்சுவான் சட்டசபைக்கான தேர்தலில் Scott Moe தலைமையில் சஸ்கச்சுவான் கட்சியும், Ryan Meili தலைமையில் புதிய ஜனநாயகக் கட்சியும் போட்டியிட்டன. இவற்றுடன் எருமைக் கட்சி, பசுமைக் கட்சி, பழமைவாதக் கட்சி மற்றும் லிபரல் கட்சி என்பனவும் போட்டியிட்டன.

தேர்தல் முடிவுகள் ஒக்ரோபர் 26இல் வெளியாகும்போது நான்காவது முறையாக சஸ்கச்சுவான் கட்சி 50 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மை ஆட்சி

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# நாமும் நமது இல்லமும் 570

## கனடிய வட்டி வீதம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

வருடாவருடம் கனடிய வட்டி வீதம் எட்டுத் தடவை மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். மத்திய வங்கியின் ஆளுநரின் தலைமையில் இந்த மீளாய்வு நடத்தப்பட்டு கனடிய பொருளாதாரத்தின் நிலைமைக்கு ஏற்றவாறு வட்டிவீதம் முடிவெடுக்கப்படும்.

2020 ஜூன் மாதத்தில் கனடிய மத்திய வங்கியின் தலைமைப் பதவியேற்ற ரிவ் மக்கெலம் (Tiff Macklem) வட்டி வீதம் மற்றும் பொருளாதாரம் பற்றிய நிலைப்பாட்டை ஒக்ரோபர் 28, 2020இல் வெளியிட்டார்.

எதிர்பார்த்தமாதிரியே கோவிட்-19இன் இரண்டாவது அலை ஒக்ரோபர் மாதத்தில் வீசத் தொடங்கியுள்ளது. ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் இதன் பாதிப்பு அதிகமாகவே இதுவரை காணப்படுகின்றது. 2020 மாசி மாதத்தில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்களின்படி, பாதிக்கப்பட்ட மக்களின் கணக்கில் ஒக்ரோபர் கடைசிக் கிழமையில் இந்த எண்ணிக்கை 1000ஐத் தாண்டியுள்ளது. இதுவே இதுவரையில் ஒன்ராரியோ எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் அதிகமானதாகும்.

ஏற்கனவே மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 0.25% என்ற வட்டிவீதம் மாற்றமடையவில்லை. இன்றைய பொருளாதார நெருக்கடியான காலத்தில் இந்தப் பெறுமதி அண்மைக்காலத்தில் மாற்றமடையும் போலத் தெரியவில்லை. கனடியப் பொருளாதாரத்தில் பண வீக்கத்தை 2.0% என்ற கோட்டைத் தாண்டாமல் மத்திய அரசு வைத்திருப்பதனை உறுதி செய்து வருகின்றது. எனினும் அண்மையில் வெளிவரும் தகவல்களின்படி இந்தப் பெறுமதி எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே (0.5%) உள்ளது. எனவே வட்டி வீத அதிகரிப்பை உடனடியாகச் செயல்படுத்த முடியாத நிலைமையில் இருப்பதைக் காணலாம். இந்நிலையில் மத்திய வங்கியின் வட்டி வீதம் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு, அதிகரிப்பு இருக்காது என்பதுவே இன்றைய நிலைமை.

ஒக்ரோபர் 28, 2020இல் நடைபெற்ற சந்திப்பில் திரு. மக்கெலம் கோவிட்-19இன் பாதிப்பில் இருந்து வெளிவர அதிக காலம் எடுக்கலாம். அத்துடன் பொருளாதார வளர்ச்சிக்குத் தம்மால் புதிய ஊக்குவிப்புக்களை கொண்டு வரலாம் எனவும் தெரிவித்துள்ளார். இன்றைய காலத்தில் 0.25% மிகக் குறைந்த மத்திய வங்கியின் வட்டி வீதமாக இருக்கும் எனவும் கூறியுள்ளார். எனினும் கோவிட்-19இன் இரண்டாவது அலையின் பாதிப்பு எவ்வாறு இருக்கும் என்று உறுதியாகக் கூற முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதனால் எதிர்கால வட்டிவீதம் பூச்சியத்துக்குக் கீழே செல்லுமா என்பதற்கு உறுதியான பதில் தெரிவிக்கப்படவில்லை. நிலைமை மோசமடையுமெனில் எதுவும் நடக்கலாம்.



இன்றைய காலகட்டத்தில், ஆதனம் கொள்வனவு செய்யும் பலர் தமது வருமானத்தைவிட அதிகமான கடன் பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளதெனத் தனது கரிசனையை தெரிவித்தார்.

அடமானக் கடன் பெறும் தொகை அதிகரிப்பதால், அடமானக் கடன் பெறுவதில் மேலதிக இறுக்கத்தைக் கொண்டுவர வேண்டியும் ஏற்படலாம் எனவும் மிகவும் அவதானமாக தெரிவித்துள்ளார்.

மார்ச் 2020இல் இருந்து இதுவரை ஏறக்குறைய 10 வீத கனடிய மக்கள் கோவிட்-19இனால் தொழிலை இழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் மீண்டும் தொழில் புரிவதற்கு நீண்டகாலம் எடுக்கலாம் எனக் கவலை தெரிவித்துள்ளார்.

அடுக்குமாடி மனைகளின் அலகுகள் வாடகைக்குக் கொடுப்பதில் மிகவும் இக்கட்டான நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக ரொறொன்ரோ மத்திய பகுதியில் நிலைமை மோசமாக உள்ளது. புதிய வாடகையாளர்களைக் கண்டுபிடிப்பதே முயல் கொம்பாக உள்ளது. இந்நிலைமை நீண்டகாலம் தொடருமாயின் வீட்டு உரிமையாளர்களின் நிலைமையும் இக்கட்டானதாகலாம்.

இந்நிலைமை தொடருமாயின் மாதாந்தக் கொடுப்பனவு செய்வதற்கு சகலராலும் முடியுமெனக் கூறமுடியாது. மாதாந்தக் கொடுப்பனவிற்குரிய அடமான கடன், ஆதனவரி (சோலை) வரி மற்றைய செலவுகளை குறிப்பிட்ட நேரத்தில் கொடுப்பனவு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் நெருக்கடியை ஏற்படுத்தும். இதனால் ஒன்றில் குறைந்த விலையில் வாடகைக்குக் கொடுக்க வேண்டும் அல்லது மனையை விற்க வேண்டும். அடுக்குமாடி மனைகள் விற்பனையும் உடனடியாக நிகழும் என்பதுவும் கேள்விக்குரியது. இரண்டாவது அலையின் பாதிப்பின் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதைப் பொறுத்தே மக்களின் தொழில் புரியும் நிலையில் ஏற்படும். குளிர்காலம் ஆரம்பிப்பதால் ஆதன வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படலாம். எதிர்வரும் மூன்று, நான்கு மாதங்கள் ஆதன வியாபாரம் மட்டுமல்ல கனடியப் பொருளாதாரத்திலும் ஒரு முக்கிய காலம் ஆகலாம். அமெரிக்கத்தேர்தல், பிரான்சின் இன்றைய அரசியல் நிலைமை, ஆர்மீனியா, ஆசவஜான் (Azerbaijan) நாடுகளுக்கு இடையேயான போர், அத்துடன் துருக்கி போன்ற நாடுகளின் கொள்கைகள் எனப் பல புறக் காரணிகள் கனடிய பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தையும் நிச்சயம் தொடர்புபடுத்தும். அரசியல் மாற்றம், பொருளாதாரத்தில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். இது ஆதன வியாபாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.




## இந்தியா...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ளது. (8) மலிவான விலையில் சில்லறை பொருட்கள் வாங்குவதற்கு உகந்த சந்தைகள் - சரோஜினிநகர், லாஜ்பதநகர், சாந்தினிசௌக் மற்றும் கரோல்பாக்.

டெல்லியிலுள்ள எல்லா சுற்றுலா தலங்களை நல்ல முறையில் சுற்றிப் பார்ப்பதற்கு இரண்டு நாட்கள் தேவைப்படும். டெல்லியின் அருகிலுள்ள மதுரா (கிருஷ்ணர் பிறந்த பூமி-



திவ்யதேசம்) மற்றும் பர்சானா (ராதா பிறந்த பூமி) பற்றிய விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.



# அமெரிக்க - சீன முரண்பாடுகளுக்குள் சிக்கியுள்ள இலங்கை!

**- விகிர்தன் -**

அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கை வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அதே வேளையில் சர்ச்சைகளை ஏற்படுத்திய தாகவும் அமைந்து விட்டது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தரும் அமெரிக்க உயர்மட்ட அதிகாரி, மைக் பொம்பியோ என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகில் கொரோனா தொற்றினால் பதிப்பிற்குள்ளாகியுள்ள நாடுகளில் அமெரிக்கா முதலாம் இடத்திலுள்ளது. அதுமட்டுமன்றி, எதிர்வரும் நவம்பர் மாதம் 03ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறுகின்றது. இதில் டொனால்ட் ட்ரம்பிற்கும் அவருக்கு எதிராக களத்தில் நிற்கும் ஜோ பிடனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்றது. இந்த நிலையில் அமெரிக்கா அதன் பாதுகாப்பு மற்றும் அயல் நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளிலும் அதிக கவனமெடுத்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

சீனாவின் உயர் மட்டக் குழுவினர் இலங்கை வந்து சென்றதன் பின்னர், சில நாட்களில் அமெரிக்க இராஜாங்க செயலாளரின் இலங்கை வருகை அமைந்துள்ளது.

சீனாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், தற்போதைய கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் பணியக உறுப்பினருமான யாங் ஜீச்சி தலைமையிலான சீனாவின் உயர்மட்டக் குழுவொன்று கடந்த 08ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது. உலகளாவிய கொரோனா தொற்றுப் பரவலுக்குப் பின்னர் தெற்காசிய பிராந்தியத்திற்கான சீனாவின் முதல் சீனப் பயணமாகவும் இது அமைந்திருந்தது.

சீனாவின் இந்த உயர் மட்டக் குழுவின் வருகையைத் தொடர்ந்து அமெரிக்க இராஜாங்க அமைச்சரின் வருகை குறித்து உடனடியாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், சில தினங்கள் தாமதமாகவே அமெரிக்க அமைச்சரின் வருகை அமைந்தது.

சர்ச்சைக்குரிய மில்லேனியம் சவால்கள் (MCC) ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் கையெழுத்திட ஆயத்தமாவதாக எதிர்க்கட்சிகளும், அரசாங்கத்துடன் இணைந்துள்ள சில கட்சிகளும் விமர்சித்துவரும் நிலையில் அமெரிக்க அமைச்சரின் வருகையை அவை சந்தேகக் கண்ணோட்டத்திலேயே பார்த்தன. மக்கள் விடுதலை முன்னணி அமெரிக்க அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.



அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ, இலங்கைக்குப் பயணம் செய்வது நாட்டின் வளங்களை கொள்ளையடிக்கவே என ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக குற்றம் சாட்டியிருந்தது. அமெரிக்காவுடனான மில்லேனியம் சவால்கள் உடன்படிக்கையின் இறுதி விடயங்கள் குறித்து இறுதி முடிவுகளை எடுப்பதற்காகவே அவர் இலங்கைக்கு வருகின்றார் என அக்கட்சி சுட்டிக்காட்டியது.

இதனை விடவும் அதிக கவனத்தைப் பெற்றது சீனா தெரிவித்த கருத்துக்கள். அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கைக்கான தனது பயணத்தின் போது, உள்நாட்டு எதிர்பார்ப்புகளில் தன்னிச்சையான வகையில் தலையிடக் கூடாது என சீனத் தூதரகம் கருத்து வெளியிட்டிருந்தது. ஏனைய நாடுகளின் உள்ளக மற்றும் வெளியுறவு விவகாரங்களில் தன்னிச்சையான தலையீடுகளை மேற்கொள்ளும் அருவருக்கத்தக்க போக்கை அமெரிக்கா மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் சீனா தெரிவித்திருந்தது. மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணம் குறித்து இலங்கைக்கான சீனத் தூதரகம் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்தது.

அதேவேளை, இலங்கை அதன் வெளிநாட்டு உறவுகளை தேவையறிந்து தெரிவு செய்ய வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி இராஜாங்க செயலாளர் டீன் தொம்சன் விடுத்துள்ள அறிவித்தல், சீன-இலங்கை இராஜதந்திர உறவை பாதிக்கும் செயல் என்றும் சீனா சுட்டிக்காட்டியது.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் இலங்கை வருவதன் முன்னர் இந்தியப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அங்கிருந்தே இலங்கை வந்தார். அவரது இந்தியப் பயணம் தொடர்பிலும் சீனா முன்னதாக கருத்து வெளியிட்டிருந்தது.

இருதரப்பு பாதுகாப்பு மற்றும் மூலோபாய உறவுகளை வலுப்படுத்துவதை மையமாகக் கொண்டு புதுடெல்லியில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மைக் போம்பியோ உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியதால், சீனாவுக்கும் பிராந்திய நாடுகளுக்கும் இடையில் அமெரிக்கா கருத்து வேறுபாட்டை விதைத்ததாக சீனா குற்றம் சாட்டியது.

இலங்கை வந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் நாட்டின் ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். இலங்கைக்கும் சீனாவிற்குமான தொடர்புகள் குறித்தும் பேசப்பட்டது. இதன்போது, யுத்தத்திற்குப் பின்னர் இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா உதவியதாகவும் ஆனால் சீனாவின் கடன் வலையில் தாங்கள் சிக்கவில்லை எனவும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ அமெரிக்க இராஜாங்க செயலாளரிடம் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'ஏனைய நாடுகளுடனான இலங்கையின் உறவு பல காரணிகளைச் சார்ந்துள்ளது. அதாவது வரலாறு மற்றும் கலாசார உறவுகள், மேம்பாட்டு ஒத்துழைப்பு ஆகியன இவற்றில் முக்கியமானவை. சர்வதேச உறவுகளின் போது நாட்டின் சுயநிர்ணயம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை விட்டுக் கொடுக்க தயார் இல்லை" என ஜனாதிபதி கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர், பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையுடன் ஒத்துழைப்புடன் செயற்படும் எனக் கூறினார்.

இறுதியாக இலங்கையின் வெளிநாட்டமைச்சர் தினேஸ் குணவர்த்னவுடன் கலந்துரையாடல் நடைபெற்று, ஊடகங்களுக்கும் மைக் பொம்பியோ கருத்து வெளியிட்டார். இதன்போது, சீனாவின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், இலங்கையின் இறையாண்மையை பாதிக்கும் வகையில் மோசமான ஒப்பந்தங்களை சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி கொண்டுவந்துள்ளது எனக் குறிப்பிட்டார். சீனாவே இலங்கையின் இறையாண்மையை மீறும் வகையில் நிலம் மற்றும் கடல் சார்ந்த பகுதிகளை ஆக்கிரமிப்பதற்காக மோசமான ஒப்பந்தங்களை மேற்கொண்டதாகவும் கூறினார்.

இலங்கை மக்கள் வெற்றி பெறுவதையும், இறையாண்மையையும் சுதந்திரத்தையும் அனுபவித்து, நிலையான வளர்ச்சியை அடைவதே அமெரிக்காவின் இலட்சியம் என்றும் அவர் குறிப்பிட்டார். மில்லேனியம் சவால்கள் ஒப்பந்தம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, அது குறித்த தீர்மானம் இலங்கையின் கைகளிலேயே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.



இந்த ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன, இலங்கை நடுநிலையாக செயற்படும் ஒரு நாடு என்பதனால் அமெரிக்கா உட்பட அனைத்து நட்பு நாடுகளுடனும் ஒத்துழைப்புடன் செயற்படும் என குறிப்பிட்டார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தினை நிறைவு செய்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ 28ஆம் திகதி பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக மாலைத் தீவை நோக்கி புறப்பட்டுச் சென்றார்.

இரண்டு முக்கிய வருகைகளாக சீனா மற்றும் அமெரிக்க உயர் மட்டத்தினரின் அடுத்தடுத்த வருகைகள் அமைந்துள்ளன. இவ்விரு நாடுகளையுமே அனுசரித்துப் போகும் தேவை இலங்கைக்கு உள்ளது.

அமெரிக்கா, சீனா ஆகிய இருபெரும் நாடுகளுக்கிடையே நிலவும் போட்டிகளுக்குள் சிக்குப்படாமலும், நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுக்காமலும் இலங்கை தனது பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தேவைகளை எவ்வாறு நிறைவேற்றிக் கொள்ளப் போகின்றது? என்பதே இங்கு முக்கியமான கேள்வியாக எழுகின்றது.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# பாரிய ஆபத்திலிருந்து தப்ப வேண்டுமானால்




கொரோனாவின் இரண்டாவது அலை இலங்கையில் முதலாவது அலையை விடவும் அதிகமாக வீசத் தொடங்கியுள்ளது. இது சமூகப் பரவல் இல்லை என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது. மினுவங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் தொடங்கி பின்னர் அதன் தொடர்ச்சியாகப் பல பகுதிகளுக்கும் பரவியதை மினுவங்கொடை கொத்தணி என்று குறிப்பிடுகின்றனர். அடுத்ததாக பேலியகொடை மீன் சந்தையில் தொடங்கி தெற்கிலும் ஹட்டன் போன்ற மலையகத்தின் மீன் சந்தைகளிலும் பரவி வருவதை பேலியகொடை கொத்தணி என்று இன்னும் அடையாளப்படுத்தவில்லை. இதனை உப கொத்தணி என்று கூறுகின்றனர்.

இவ்வாறு அழைக்கப்பட்டாலும் இது இரண்டாவது அலையின் சமூகப் பரவல்தான் என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அதுமட்டுமன்றி இந்த அலையிலிருந்து மக்களைப் பாதுகாக்க தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது தற்போது மிக அவசியமாகின்றது.

தெற்கில், அதிகளவு தொற்று பரவியுள்ள பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு மக்கள் செல்லாமலிருப்பதைக் கண்காணிப்பதற்காகப் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இந்தக் கட்டுப்பாடுகளை சிலர் மீறி நடந்துகொள்வதையும் காணமுடிகின்றது. கட்டுப்பாடுகளை மீறுவோர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவர்கள் பயணிக்கும் வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்படுகின்றன.

இது ஒருபுறமிருக்க, வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள் கொரோனா தடுப்பு தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கொரோனா விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டபோது பொலிஸ் அதிகாரி ஒருவரும் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இப்போது யாழ்ப்பாணத்தில் கட்டுப்பாடுகளை இறுக்கமாக்கும் நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்தக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இந்த கூட்டம் இடம்பெற்றது.



இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.பிரதீபன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், வட மாகாண உளநல சேவை பணிப்பாளர் கேசவன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த. சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளைத் தளபதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த 'யாழ். மாவட்ட கொவிட்-19 உயர்மட்டக் குழு' சில கட்டுப்பாட்டு நடைமுறைகளை அறிவித்துள்ளது.

வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருவோர் அந்தப் பகுதி கிராம அலுவலர் ஊடாகத் தங்களது முழு விபரங்களையும் பதிவு செய்ய வேண்டும் என்பது இதில் முக்கியமான ஒன்றாகும். இது ஒரு போர்க்கால நடைமுறை போன்றிருந்தாலும் தவிர்க்க முடியாததே.

மரணித்தவர்களின் இறுதிச் சடங்கில் 25 பேருக்கு மேல் கலந்துகொள்ள முடியாது. இரண்டு தொடக்கம் மூன்று நாள்களில் மரணச் சடங்கு நிறைவடைய வேண்டும். இதில் வெளி மாவட்டங்களில் இருந்து வருவோர் கலந்துகொள்ள முடியாது.

அத்துடன் திருமண நிகழ்வுகள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்ற நிகழ்வுகளுக்கும் கட்டுப்பாடுகள் உள்ளன. அதிகளவிலானோர் இவற்றில் கலந்து கொள்ள முடியாது. இன்று வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளில் அதிகளவிலானோர் கலந்துகொண்டு வருகின்றனர். அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வோர் இடைவெளியை பேணுவதில்லை. முகக் கவசம் அணிவதையும் பலர் தவிர்க்கின்றனர். இதற்கான நடைமுறை கட்டுப்பாடுகள் இன்றைய சூழ்நிலையில் மிக அவசியமாகின்றது.

போக்குவரத்து பஸ்களில் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துசெல்லும் பஸ்களில் இந்த நடைமுறை இருந்தபோதிலும் அது பின்னர் கைவிடப்பட்டது. யாழ்ப்பாணத்திற்குள் போக்குவரத்து சேவையிலீடுபடும் தனியார் பஸ்கள் இப்பாதுகாப்பு நடைமுறைகளை முழுவதுமாகவே கடைப்பிடிப்பதில்லை. குறிப்பாக யாழ். குடாநாட்டில் சேவையிலீடுபடும் 'மினிபஸ்'கள் பயணிகளை அதிகளவில் நெருக்கமாகவே ஏற்றிச் செல்கின்றன. பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களின் நடவடிக்கைகளும் கடுமையாக அவதானிக்கப்படுவது இப்போது அவசியமாகின்றது.

இவற்றைவிடவும் வேறு பல கட்டுப்பாடுகளும் குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகளுக்கு அப்பால், இக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் சம்பந்தப்பட்டோரால் சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிக்கும் பணியே மிக முக்கியமானது.

தெற்கில் மினுவங்கொடை கொத்தணிப் பரவல் யாழ்ப்பாணத்திற்குள்ளும் ஊடுருவியது. பின்னர் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இப்போது பேலியகொடை பரவலும் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துள்ளது.

பேலியகொடை மீன் சந்தையுடன் தொடர்பு வைத்திருந்த பருத்தித்துறை மற்றும் கரவெட்டி பகுதிகளில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், கரவெட்டி இராஜகிராமம் முடக்கப்பட்டுள்ளது. அங்கு சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் தனிமைப் படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல், பாசையூர் மேற்கு மற்றும் குருநகர் பகுதிகளிலும் தொற்றாளர்கள் கண்டறியப்பட்ட நிலையில் அப்பகுதிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்கள் அனைவருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசோதனைகளின் பின்னர் முடக்க நிலை தளர்த்தப்பட்டு இயல்பு நிலை ஏற்படலாம். அதுவரை தொற்றின் பரவல் மேலும் ஏற்படாமல் கட்டுப்பாடாக இருப்பதென்பது ஒவ்வொருவரினதும் சமூகக் கடமையாகும்.

இன்று நாள்தோறும் நூற்றுக்கணக்கானோர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டு முடக்கப்படும் நிலை ஏற்படலாம் என்கின்ற கருத்தும் வெளியிடப்படுகின்றது.

முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க நாடு முழுவதும் முடக்கப்பட வேண்டும் என கருத்து வெளியிட்டுள்ளார். குறைந்தது ஒரு வாரமாவது நாடு முடக்கப்பட வேண்டும் என்கின்றார் அவர்.



கொரோனா முதல் அலையின்போது நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டு முடக்கப்பட்டிருந்தது. அப்போது சாதாரண பொதுமக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டது. கொரோனா பரவலின் பக்க விளைவாக அதிகம் பாதிப்பை பொருளாதார வீழ்ச்சி ஏற்படுத்துகின்றது. இதனை கருத்தில்கொண்டு பொதுமக்கள் கொரோனா சுகாதார நடைமுறைகளை பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் கடைப் பிடித்தால் மட்டுமே இன்று ஏற்பட்டுள்ள பாரிய ஆபத்தான நிலையிலிருந்து தப்ப முடியும்.

World Class Realty Point Brokerage
Affordable Homes ♦ Pre-Construction Condos
Investment Properties
Search Here - Find Here
HousePrice.ca
www.HOUSEPRICE.ca
Right Realtor Right Price
Sam Surendran
Sales Representative
Dir: 647.350.0220
World Class Realty Point Brokerage
55 Lebovic Ave, #C115, Toronto, ON M1L 0H2. Tel: 416.444.7653

# The Farewell - திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

ஆங்கிலம் மற்றும் சீன மொழிகளில் எடுக்கப்பட்ட இப்படம், இயக்குனரின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை வைத்து எடுக்கப்பட்டது. சீன மொழியில் "அவளுக்குச் சொல்ல வேண்டாம்" என்ற பெயருடன் வந்த இப்படம் ஆங்கில மொழியில் "The Farewell" என அழைக்கப்பட்டது. அமெரிக்காவில் வாழும் Billi என்ற ஒரு சீனப் பெண்ணிற்கும், சீனாவில் வாழும் அவரது பாட்டிக்கும் இடையே உள்ள உறவைப் பற்றியதுதான் இப்படம்.

மேற்படிப்பிற்கு உதவும் ஆய்வுக்குரிய பணத்திற்காக விண்ணப்பம் செய்த Billi, அது நிராகரிக்கப்பட்ட பின்னர் சீனாவில் உள்ள தனது பாட்டிக்குப் புற்று நோய் வந்து விட்டது எனத் தனது பெற்றோரிடம் இருந்து அறிகிறார். தனக்கு நோய் உள்ளது எனப் பாட்டிக்குத் தெரியாது. அவரது மகனான Billiயின் அப்பாவும் அவர்களது குடும்பமும் இவ்வாறே பாட்டிக்கு அவவின் நோய் தெரியாமல் இருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றனர். சீனச் சமுதாயத்தில் இது சம்பிரதாயம் எனக் காட்டப்படுகிறது.

புற்றுநோய் உடைய பாட்டியை குடும்பத்தில் உள்ள அனைவரும் சந்திப்பதற்காக Billiயின் ஒன்றுவிட்ட சகோதரருக்கு (cousin) கல்யாணம் சீனாவில் வைக்கப்படுகிறது. அமெரிக்கக் கலாசாரத்தில் வளர்ந்த Billi பாட்டியிடம் உண்மையைச் சொல்லி விடுவார் என அஞ்சி அவளைக் கூட்டிக்கொண்டு செல்வது பணச்செலவு எனக் கூறி Billiஐ அமெரிக்காவில் விட்டு



விட்டு, அவரது பெற்றோர் சீனாவிற்குக் கல்யாணத்திற்கு செல்கின்றனர்.

பாட்டியுடன் மிகவும் நெருங்கிய உறவு கொண்ட Billi அவரது பெற்றோர் சொன்னதைக் கேட்க மறுத்து சீனாவில் உள்ள பாட்டியின் வீட்டுக்குத் தானாகவே செல்கிறார். அமெரிக்க மற்றும் சீன கலாசாரங்களுக்கு நடுவில், குடும்பத்தினருக்கு மத்தியில் பாட்டிக்கு நோய் இருக்கிறது என்று Billi சொல்வாரா இல்லையா என்பது இப்படத்தின் மீதிக்கதை.

பாட்டி-பேத்தி உறவு, அமெரிக்க-ஆசியப் பண்பாடு எனப் பல அடையாளங்கள் இப்படத்தில் வர்ணிக்கப்படுகின்றன. அவரது பாட்டிக்குப் பொய் சொல்ல Billiக்குப் பிடிக்கவில்லை. இது பாட்டியின் உரிமையை மதிக்காமல் அவரை



அவமதிப்பதாகவும், குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு செயலாகவும் கருதுகிறார். மறுபக்கத்தில் அவரது குடும்பம் புற்றுநோயை விட புற்றுநோய் பற்றிய பயம்தான் ஒருவரைக் கொல்கிறது என்றும், தனித்துவமாக மக்கள் வாழும் அமெரிக்கக் கலாசாரத்தைச் சேர்ந்த Billiக்கு அவர்களது நியாயம் புரிவது கஷ்டம் என்கின்றனர். அதாவது ஆசியாவின் கலாசாரத்தில், பாதிக்கப்பட்டவரின் சுமையை அவரைச் சுற்றி இருப்போர் தான் சுமப்பர். தங்கள் நிம்மதிக்காக மற்றவர் மீது மன அழுத்தத்தை கொடுக்க மாட்டார்கள்.

ஆசியாவில் கூட்டுக் குடும்பத்தில் வாழ்வோருக்கு அவர்கள் செய்வது பொருந்துகிறது. ஆனால் குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் தனியாக உதவி செய்யக் குடும்பத்தவர் இல்லாமல் வாழ்வோருக்கு அவர்கள் செய்வது பொருந்தாது. எனவே இரு முறைகளும் அவரவர் கலாசாரங்களுக்குப் பொருந்துகிறது.

இதேபோல் ஆசியாவும் அமெரிக்காவும் இப்படத்தில் சில தருணங்களில் தெளிவாக ஒப்பிடப்படுகின்றன. சீனாவில் பிறந்து அமெரிக்காவில் வாழும் Billi அமெரிக்காவின் மீது ஆசை கொள்ளும் சீனர்களுக்கு அமெரிக்காவை பாராட்டியோ, குறைத்தோ பேசுவதில்லை. இரண்டு பண்பாடுகளும் வெவ்வேறு என்றே கூறுகிறார். இதுவும் படத்தில் அழகாக வர்ணிக்கப்படுகிறது.

இத்தகைய கருத்துக்களுடன் படம் சாதாரணமாகவே Billiயும் அவளது குடும்பத்துடனும் நகர்கிறது. Billiஐப் போல் ஆசிய அமெரிக்க கலாசாரத்தில் வாழும் எம்போன்ற இளையோரும் அவர்களது பெற்றோரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படம்.

---

# கனடாவில்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அமைக்கும் தகுதியைப் பெற்றது. புதிய ஜனநாயகக் கட்சி 11 ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சியானது. ஏனைய கட்சிகள் ஓர் ஆசனத்தையும் பெறவில்லை. வாக்களிக்கத் தகுதிபெற்ற 841,807 வாக்காளர்களில் 385,461 பேரே (47%)



Saskatchewan Premier Scott

இத்தேர்தலில் வாக்களித்திருந்தனர். இவர்களில் 63%ஆனோர் சஸ்கச்சுவான் கட்சிக்கும் 29%ஆனோர் புதிய ஜனநாயகக் கட்சிக்கும் வாக்களித்திருந்தனர். என்றுமில்லாதவாறு 61,255 பேர் தபால் மூலம் வாக்களிக்க வாக்குச் சீட்டுகளைப் பெற்றிருந்தனர். இவர்களில் ஏறக்குறைய 40,000 வாக்குகள் செல்லுபடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிலர் வாக்குச்சீட்டைப் பெற்றிருந்தாலும் வாக்குகளைத் தபால் மூலம் அளித்திருக்க மாட்டார்கள். அதைவிட பிந்திக் கிடைத்த வாக்குகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

ஊடகவியலாளர்களின் கணிப்பின்படி மிகக் குறைந்த அளவு வாக்குகளால் வென்ற 8 இடங்களின் முடிவு மட்டுமே தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளில் தங்கியுள்ளது. பெரும்பான்மை அரசை அமைக்க ஆகக்



NDP Leader Ryan Meili

குறைந்தது 31 ஆசனங்களே தேவைப்படுவதால் 50 ஆசனங்களைப் பெற்ற சஸ்கச்சுவான் கட்சி பெரும்பான்மை அரசை அமைப்பது தபால் மூலம் பெற்ற வாக்குகளில் தங்கியிருக்கவில்லை. ஆனால் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Ryan Meili தற்போது 85 வாக்குகளால் அவரது தொகுதியில் இரண்டாம் இடத்தில் உள்ளார். அவரது வெற்றி தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையில் தங்கியுள்ளது. தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை நொவெம்பர் 7ஆம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# தித்திக்கும் தீபாவளி நமக்கெதற்கு...!

நரகாசுரன் அழிந்தானெனும் நம்பிக்கையில்
நாமெல்லாம் ஆண்டுதோறும் தீபங்களேற்றி
ஆரவாரத்தோடு இனிய தீபாவளி நன்னாளை
ஆனந்தமாய்க் கொண்டாடி மகிழ்ந்தோம்
நேரத்தோடு பலகாரவகை செய்துகொள்ள
நேர்த்தியுடன் பொருளெல்லாம் வாங்கி வைத்து
ஆற அமர உட்கார்ந்து யோசித்து யோசித்து
அனைத்து வேலைகளும் செய்து முடிப்போம்!

வீட்டிலேயே இருக்கின்ற குடும்பத்தார்க்கும்
விரும்பியே வருகின்ற சுற்றத்தார்க்கும்
பட்டிலே சேவைகளும் பதவிசான ஆடைகளும்
பலவகையான பலகாரங்களும் பானங்களும்
குட்டிப் பிள்ளைகள் விளையாடி மகிழ்ந்திட
கொள்ளை அழகுறு பொம்மைகள், பந்துகள்
வெட்டிச் செலவெனப் பாராமல் பலவர்ண
வாணங்கள் பட்டாசுகள் வாங்கிடுவோம்!

தீபாவளிதிருநாள் மலர்ந்ததுமே மனம்
திக்கெட்டும் பறந்துபறந்து துள்ளிடும்
பாவங்கள் தொலைந்திட தலைமுழுகி
பட்டாடை உடுத்திப் பரவசமாய்
தீபங்களேற்றித் திசையெங்கும் ஒளிர
தீமைகள் அகன்றிடப் பிரார்த்தித்து
சாபங்கள் இல்லாவாழ்வுக்காய் வேண்டி
சான்றோர் பாதம்பணிந்து நிற்போம்!

மண்ணைவிட்டு நரகாசுரன் மாண்டிருந்தால்
மகிழ்ச்சியுடன் தீபாவளித் திருநாளைநல்
எண்ணமுடன் கொண்டாடி மகிழ்ந்திடலாம்
ஏனோ இன்னுமவன் உயிர்தரித்தான்?
திண்ணமுடன் மண்மீது வந்துவிட்டான்
திரும்பிய திசையெல்லாம் அவனாட்சி
கண்ணெதிரே பலலெட்சம் பேரைக் காவு கொண்டு




13-11-2020 தீபாவளித் திருநாள்

கவலையின்றி புவனமெங்கும் அலைகின்றானே!

நரகாசுரன் என்னும்நாமம் இன்று அவனுக்கில்லை
நல்லதொரு பெயர் கொண்டான் 'கொரோனா' வென
அரசனென்றும் ஆண்டியென்றும் பாராமல்
ஆணென்றும் பெண்ணென்றும் கொள்ளாமல்
வீரனென்றும் கோழையென்றும் நோக்காமல்
வில்லனென்றும் நல்லனென்றும் எண்ணாமல்
சூரனிவன் சுறுக்கென்று கதைமுடிப்பான்
சுறுசுறுப்பாய் செயல்படுவான் சுதந்திரமாய்!

திருடனைப்போல் வீட்டினுள்ளே ஒழிந்துகொண்டோம்
தித்திக்கும் தீபாவளி நமக்கெதற்கு?
கருடனைக் கண்டபாம்பு பதுங்குமாற்போல்
காலத்துக்கும் நமக்குஇனி பதுங்குவாழ்க்கை
இருக்கும் வரை பாதுகாப்பு நமக்கு வேண்டும்
இல்லத்துள் இருந்தால்தான் அதுநடக்கும்
பெருமைபேசி வாழ்ந்ததெல்லாம் போதும் 'கொரோனா'
போயொழியும் நன்னாளே நமக்குத்தீபாவளி!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# நம்பிக்கை



Dr. ஃபஜிலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

நான் அந்தக் கம்பெனியை மிகவும் நம்பித்தானே சீட்டுக் கட்டினேன். இப்படி நம்பிக்கை துரோகம் செய்து விட்டார்களே!

நெருங்கிய உறவு என்றுதானே நம்பி அவசர நேரத்தில் இவ்வளவு பண உதவி செய்தேன், ஆனால் இப்படி ஏமாற்றி விட்டார்களே.

நல்ல நண்பர் என்றுதானே என் மனதில் கிடந்த பாரங்களை இறக்கி வைத்தேன். இது உனக்கும் எனக்கும் இரகசியமாக இருக்கும் என்று அவ்வளவு சொல்லி என் மனப்பாரத்தை எல்லாம் இறக்கி வைக்கத் தூண்டி விட்டுவிட்டு, இப்படி ஒன்றிற்கு இரண்டாக வெளியே சொல்லி பிரச்சினையை ஏற்படுத்தி விட்டனரே.

இப்படி ‘யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்’ என்ற சாகாவரம் பெற்ற பாடலை வாழ்வில் ஒரு முறையாவது முணுமுணுக் காதவரே இருக்க முடியாது எனலாம்.

பளபள விளம்பரங்களும் பகட்டான பரிசுகளையும் நம்பி தகுதிக்கு மீறிப் பணம் கொடுத்து வாங்கி வரும் பொருட்கள்தான் தரமில்லாமல் போகிற தென்றால் கஷ்டப்பட்டு சேமித்து பணம் கட்டும் நிறுவனங்களும் காலைவாரி விடுகின்றன. இதெல்லாம் போதாதென்று நெருங்கிப் பழகும் உறவுகள் நட்புகள்கூட நம்பிக்கையை பொய்யாக்கி சுய நலத்துடன் நடப்பதையும் அனுபவிக்க வேண்டி இருக்கிறது எனப் பல நேரங்களில் வாங்கும் பொருட்களிலிருந்து பழகும் நபர்கள்வரை இன்றைய உலகமே ஒரு அவநம்பிக்கையால் கட்டமைக்கப் பட்டது போல மாறிக் கொண்டிருப்பது போல் ஒரு மாயை எழும்.

இனி வாழ்க்கையில் யாரையும் நம்பி விடக் கூடாது என்பதில் நான் மிக முடிவாக இருக்கிறேன். நான் நம்பியவர்கள் எல்லோரும் ஏமாற்றி விட்டனர் என நம்பிக்கை எல்லாம் சுக்கு நூறாக உடைந்து விட்டது. இனி எப்படி என்னால் யாரையும் நம்ப முடியும் என சமூகத்தின் மீதும் கோபமும் தன் மீது ஆற்றாமையும் இயலாமையும் ஏற்படும்.

முதலில் நம்பிக்கை என்பது ஒரு பொருள் அல்ல. அது சுக்கு நூறாகவோ அல்லது இஞ்சி ஆயிரமாகவோ உடைவதற்கு. நம்பிக்கை என்பது உங்களுக்குள் ஏற்படும் ஒரு மனநிலை.

பொதுவாக எந்த விடயத்தையும் ஒன்று மனம் துருவித் துருவி ஆராய்கிறது அல்லது முழுவதுமாக நம்பி ஆழ்மனம் எழுப்பும் எச்சரிக்கைகளை உதாசீனம் செய்துவிட்டு அல்லும் பகலும் தவிக்கிறது.

என்னதான் பட்டம் வானத்தில் பறக்க வேண்டுமென்று அதை வானில் பறக்க விட்டாலும் அது திரும்பி தன் கைகளுக்குள் வர வேண்டும் என்று நினைப்போர் அதன் ஒரு நுனியை தன் கையில் பிடித்து தன் முழு கவனத்தையும் அந்தப் பட்டத்தில் வைத்து அது வேறு எதிலும் சிக்கித் தன் கையை விட்டும் நழுவி விடக் கூடாது என்று தான் பல நேரங்களில் இருக்க வேண்டி இருக்கிறது. அதை விட்டும் அதை வானில் பறக்க விட்டு அதுவே தானே வந்துவிடும் என நினைத்து கேட்பாரற்று இருக்கச் செய்து பின் யாரையும் எந்த வகையிலும் நம்ப மாட்டேன் என்றே மனம் அரற்றுகிறது என என்னென்னவோ எல்லாம் முடிந்தபின் தோன்றுகிறது.

எந்த ஒரு சூழலிலும் மிக விழிப்புணர்ச்சியோடு யார் சொல்கின்றனரோ, அவர்கள் எந்த உடையில் இருக்கின்றனரோ, எவ்வளவு ஆழமாகச் சொல்கின்றனர் என்பதை எல்லாம் தாண்டி எந்த அடிபடையில் சொல்கின்றனர் என்று அறிவு பூர்வமாக ஆராய்ந்து செயல்படுவோர் வெற்றியாளர்களாக மன அழுத்தம் இல்லாதோராக இருக்கின்றனர் என்கிறது வாழ்வியல்.

நியூஜெர்ஸியில் இது சம்பந்தமாக ஒரு நீண்ட ஆய்வு நடத்தப்பட்டது, அதன் ஒரு பகுதியாக ஒரு கார் நிறுத்துமிடத்தில் வாடிக்கையாளர்கள் கார்களை நிறுத்த வரும்போது அங்கு காரை நிறுத்தக் கூடாது என்று கூறும்படி சில தொண்டர்களை ஏற்பாடு செய்திருந்தனர். முதலில் சாதாரண உடையில் அங்கு வரும் வாடிக்கையாளர்களிடம் சொல்வதாகவும் பின்பு பாதுகாப்பு அலுவலர்களுக்கான சீருடை அணிந்து கொண்டு சொல்வதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாதாரண உடையில் சென்று சொல்லும் போது பொருட்படுத்தாத வாடிக்கையாளர்கள்கூட சீருடையில் சொல்லும்போது எதிர்ப்புக் காட்டாமல் சென்று விட்டனர். அதேசமயம் சீருடை இல்லாமல் சொல்லும் போதும் ஒரு பாதுகாப்பு அலுவலரைப் போல இறுக்கமான தோரணையுடன் இருந்த தொண்டர்கள் சொல்வதைக் கேட்ட வாடிக்கையாளர்கள் அவர்கள் சொன்னதை எதிர் கேள்வி இல்லாமல் கேட்டு கார்களை நிறுத்தாமல் சென்று விட்டனர்.

இதேபோன்று விற்பனை, முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் ஆராய்ந்து அதன் முடிவாக எது ஒன்றையும் உங்களை நம்பச் செய்வதற்கு மூன்று அடிப்படை விடயங்கள் முதன்மையாக இருக்கிறது என வலியுறுத்துகிறது இன்னும் பல ஆய்வுகள்.



அதாவது சொல்லும் செய்திக்குப் பொருத்தமான தோற்றம் மற்றும் அதைப் பிரதிபலிக்கும் உடை, தவிர மீண்டும் மீண்டும் சொல்லப்படும் ஒரு விடயம். இந்த மூன்று விடயங்கள்தான் உங்கள் மனதை உங்கள் கட்டுப்பாட்டிலிருந்து பிரித்து உங்கள் ஆழ்மனம் கூறும் எச்சரிக்கைகளை எல்லாம் புறந்தள்ளி உங்களை ஒரு நபரையோ அல்லது எந்தச் செய்திகளையுமோ தகுந்த காரணம் இல்லாமல் நம்பச் செய்கிறது என்கின்றன அந்த ஆய்வுகள்.

அதே ஆய்வின்போது வெளிப்பட்ட இன்னொரு முடிவும் மிக முக்கியமானது. அதாவது ஆய்வின்போது அணுகப்பட்ட வாடிக்கையாளர்களில் வெற்றிப் பின்னணியில் இருந்தோர் எந்த நிலையிலும் ஆய்வாளர்களின் கோரிக்கைகளுக்கு ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் கூறப்பட்ட விடயங்களுக்கான ஆதாரத்தைக் காட்டச் சொன்னார்கள்.

“எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்று வள்ளுவர் கூறியது வெறும் மதிப்பெண்களுக்கான படிப்பல்ல. அதுவே வாழ்வியல் பாடம் என்பதை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கிறது இந்த ஆய்வின் முடிவு.

நம்பிக்கை என்பது பிற மனிதர்கள் மீதோ அல்லது நிறுவனங்கள் மீதோ அல்லது பொருட்கள் மீதோ வைக்கப்படுவது அல்ல, மாறாக உங்கள் ஆழ்மனதின்மீது வைக்கப்பட வேண்டியது.

நம் உடல் உறுப்புகளிலிருந்து, நம் ஆழ்மனம், நம் சமூகம் இந்தப் பிரபஞ்சம் எல்லாமே ஒன்றோடொன்று பின்னப்பட்டு ஏதாவது ஒரு வகையில் ஒன்றை ஒன்று சார்ந்தே இருக்கிறது என்கிறது ஆழ்மன இயல்.

ஒரு சில எதிர்மறையான நிகழ்வுகள் உங்கள் மேல் உள்ள தன்னம்பிக்கையையும் இந்த சமூகத்தின் மேல் உள்ள ஒட்டு மொத்த நம்பிகையையும் இழக்க அனுமதிக்காதீர்கள். அது உங்களுக்கான உலகத்தையும் உங்கள் எதிர்காலத்தையும் அப்படியே சுருக்கி விடும்.

தவிர உங்கள் உள்ளுணர்வு உங்களுக்குக்கான வழிகாட்டி. உங்கள் உள்ளுணர்வை நீங்கள் சரியாகக் கவனிக்காமல் இருந்த தருணங்களில் தவறான அனுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். உங்கள் அனுகூலங்கள் தவறாகப் போனதை வைத்து, நீங்கள் நம்பியவர்கள் உங்கள் நம்பிக்கைக்கேற்ப நடந்து கொள்ளாததை நினைத்து உங்கள் ஆழ்மனம் என்ன சொன்னாலும் அதை உங்கள் மனம் நிராகரித்து செயலற்று இருக்க முனையும். அப்படி நீங்கள் ஒட்டு மொத்தமாக உங்கள் ஆழமனதை உங்களுக்கான சரியான வழிகாட்டியையே ஒதுக்கி வைத்து விட்டால் அது பல கதவுகளை அடைத்து விடும்.

உங்களுக்கான சரியான நம்பிக்கையான நபர்கள் அடையாளப்படுத்தக் கூடிய வகையில் உங்கள் ஆழ்மனதை நேர்மறையான சிந்தனைகளால் நிரப்புங்கள். அது உங்கள் மனதின் இறுக்கத்தைக் குறைக்கும். மகிழ்ச்சி நிலைக்கும்.

“இறைவனை நம்புங்கள், ஒட்டகத்தை கட்டி வையுங்கள்” என்று ஓர் அரபு நாட்டுப் பழமொழி உண்டு. எவ்வளவு நம்பகமான ஒட்டகமாக இருந்தாலும் இறைவன் பாதுகாவலில்தான் விடுகிறீர்கள் என்றாலும் அதற்கு செய்ய வேண்டிய முறைகளை செய்துவிட வேண்டும். அதன் பின் மனதை போட்டு சலனத்திற்கு ஆளாக்காமல் நிம்மதியாக இருங்கள் என்பதுதான் அதன் அர்த்தம்.

அதனால் முழுமையாக யாரையும் இனி நம்பக் கூடாது என்று முடிவுக்கு வருவதை விட்டும் எந்த இடத்தில் தவறாகப் போனது என்ன செய்திருந்தால் இந்த மாதிரி நடக்காமல் தடுத்திருக்கலாம். இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது எது என கொஞ்சம் நடந்தவற்றை ஒவ்வொரு கட்டமாக அலசிப் பாருங்கள்.

எந்த சூழல்வரை சரியாக எல்லாம் போய்க் கொண்டிருந்தது, எந்த இடத்தில் சறுக்கியது, எது சறுக்கச் செய்தது என்பது சரியாகப் பிடிபடும்போது அதை விழிப்புணர்ச்சியோடு அணுகும்போது, தீர்வுகள் இலகுவானதாக இருக்கும். தவிர ஏதாவது ஒரு வகையில் அது தீர்க்க முடியாததாக இருந்தாலும் மனம் அதை ஏற்றுக்கொண்டு மாற்றுத் தீர்வை பற்றி சிந்திக்கும்.

**நம்பிக்கையுள்ள மனிதனுக்கு எப்போதும் ரோஜா தான் கண்ணில் படும் முட்கள் இல்லை**

விளம்பரம் VLAMBARAM
30 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# பெண்கள் தொடர்பான தங்களது புரிதல்களை ஆண்கள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்!

**நேர்காணல் - லட்சுமி ராமகிருஷ்ணன்   நேர்கண்டவர் - கண்ணன்**

உற்சாகமாக இருக்கிறார் லட்சுமி ராம கிருஷ்ணன். சென்னை வெள்ளத்தைப் பின்னணியாகக் கொண்டு அவர் இயக்கிய 'ஹவுஸ் ஓனர்' திரைப்படம் இந்திய ஒன்றிய அரசின் விருதைப் பெற்றுள்ளது. திரைப்பட இயக்குநர், நடிகர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர் எனப் பல முகங்கள் கொண்டவர் லட்சுமி ராமகிருஷ்ணன். 'ஹவுஸ் ஓனர்' இயக்குநராக அவரின் நான்காவது படம். மனித உறவுகள் மீதான மதிப்பீடுகளையும், அதன் சிக்கல்களையும் அடிப்படையாகக் கொண்டவையே இவரது கதைக் களங்கள். சென்னையில் உள்ள லட்சுமி ராமகிருஷ்ணன் இல்லத்தில் அவரை சந்தித்தோம்;

**மீண்டும் ஓர் உயர்ந்த விருதைப் பெறுகிறீர்கள் எப்படி உணர்கிறீர்கள்?**

சிறு முதலீட்டில் உருவாக்கப்பட்ட 'ஹவுஸ் ஓனர்' படத்துக்கு இந்திய மத்திய அரசு விருது அறிவித்திருப்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாத மகிழ்ச்சியை தருகிறது. என்னைப் போன்ற இயக்குனருக்கு நிச்சயம் இது பெரிய விஷயம். லிமிடெட் பட்ஜெட்டில் நல்ல படங்களை இயக்கி மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்று நினைக்கும் ஆள் நான். விடா முயற்சியும் கடின உழைப்பும்தான் இதற்குக் காரணமாக இருந்துள்ளது. அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் என் கணவருக்கு நான் நன்றி சொல்லவேண்டும். அவருடைய உதவி இல்லாமல் என்னால் எதுவுமே செய்திருக்க முடியாது. என் பிள்ளைகள், ஊடக நண்பர்கள் என என்னை ஊக்குவித்த அனைவருக்கும் நன்றி. உணர்ச்சி வயப்பட்டிருக்கிறேன். விரைவில் அடுத்த படத்தை அறிவிப்பேன்.

**'ஹவுஸ் ஓனர்' படத்தை டிசம்பர் 2015 சென்னை வெள்ளத்தைப் பின்னணியாக வைத்து எடுத்துள்ளீர்கள் இப்போது மீண்டும் ஒரு வெள்ள அபாயத்தை சென்னை சந்திக்கிறது. 2015 சென்னை வெள்ளத்தின் போது நீங்கள் எதிர் கொண்ட அனுபவங்கள் எப்படிப்பட்டவை?**

என்னுடைய அனுபவம்தான் இந்தப் படம். இந்தப் படம் முழுவதுமே உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டுதான் எடுத்திருக்கிறேன். இப்படத்தில் இடம் பெற்றிருக்கும் கதாபாத்திரங்கள் எல்லோருமே நான் நேரில் சந்தித்த மனிதர்கள் தான். சென்னை வெள்ளத்தின்போது எனது அக்காவும், அவரது கணவரும் 30 மணிநேரத்துக்கு மேலாக எங்கே இருக்கின்றனர்? என்றே தெரியவில்லை. அப்போது நாங்கள் அடைந்த பதட்டத்துக்கு அளவே இல்லை. இயற்கையின் சீற்றம் மிகக் கொடியது. மனிதர்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவு விளைவுகளை அது ஏற்படுத்தக் கூடியது. இயற்கையை மனிதர்கள் சீண்டிப்பார்த்த தன் விளைவுதான் இந்த வெள்ளம். நமது



பொறுப்பின்மையால்தான் நாம் இந்தக் கதிக்கு ஆளானோம் என்கிற உண்மையை நாம் உணர வேண்டும். ஏரி, குளங்களை ஆக்கிரமித்து குடியிருப்புகளை உருவாக்கி விட்டோம். நீர் வழிப் பாதைகள் தடைபட்டுப் போனது. பாதாள சாக்கடைகளில் ப்ளாஸ்டிக் அடைத்துக் கொண்டது. தண்ணீர் வெளியேற வழியில்லாமல் நமது வீடுகளுக்குள் பாய்ந்தது. இதனை நாம் முன்பே முறைப்படுத்தியிருந்தால் வெள்ளத்தை எளிதாக சமாளித்திருக்கலாம். அவ்வளவு மழை பெய்தும் அதனை நாம் சேமிக்கவுமில்லை, அதனால் நிலத்தடி நீரும் உயரவில்லை. முன்பு வெள்ளத்தால் அவதிப்பட்டோம். இப்போது தண்ணீர் பற்றாக்குறையால் அல்லாடுகிறோம். இரண்டுக்கும் காரணம் மனிதர்களின் பொறுப்பின்மைதான். வெள்ளத்தின்போது கிடைத்த அனுபவங்களையும், புரிதல்களையும் பின்னணியாக வைத்து இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர இது வெள்ளத்தைப் பற்றிய படம் அல்ல. இது ஓர் காதல் கதை. இதுவரை வெளியான காதல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் இதனை அணுகியிருக்கிறேன்.

**உங்களது படங்களில் புதுமுகங்கள் அதிகம் இடம் பெறுகிறார்களே?**

'ஹவுஸ் ஓனர்' படத்தில் விஜி சந்திரசேகரின் மகள் லவ்லின் சந்திரசேகர் அறிமுகமாகிறார். எனது படங்களைப் பொறுத்தவரை படப்பிடிப்புக்கான செலவுதான் பட்ஜெட்டாக இருக்கும். நடிகர்களின் சம்பளம் பெரிதாக இருக்காது. புதுமுகங்கள் என்பதைவிட அந்தந்த பாத்திரங்களுக்கு ஏற்றவர்களைத் தேர்வு செய்வேன்.

**திரைத்துறை என்பது முழுவதும் வணிக மயமானது. பெண் இயக்குனராக நீங்கள் படம் இயக்க வருகையில் வணிக ரீதியான சமரசங்களுக்கு ஆட்பட வேண்டி இருந்ததா?**

இங்கு வணிக சினிமா என்பதையே மிகவும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர். சண்டைக்காட்சிகளும், குத்துப்பாடல்களும் கொண்ட சினிமாதான் வணிக சினிமா என்றாகி விடாது. தமிழ்சினிமா வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தெரியும். எல்லாக்காலத்திலும் நல்ல கதையம்சம் கொண்ட படங்கள் பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கின்றன. ஸ்டார் வேல்யூ உள்ளவர்கள் நடிப்பதால் மட்டுமே படம் ஓடும் என்றாகி விடாது. மக்கள் நல்ல கதையை, சின்ன சின்ன நுணுக்கங்களை, சின்னச் சின்ன தருணங்களை ரசிக்கின்றனர். மேற்குத் தொடர்ச்சி மலை, காக்கா முட்டை, டூலெட் போன்ற படங்கள் பெற்றிருக்கும் வெற்றியே இதற்கு உதாரணம். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் மக்கள் திரையரங்குக்கு வருகின்றனர். அவர்களுக்கு நல்ல கதையை, சுவாரஸ்யமான திரைக்கதையில் காட்சிப் பூர்வமாக அளிப்பது திரைப்படைப்பாளிகளின் கடமை. சின்ன பட்ஜெட் _ பெரிய பட்ஜெட், பெரிய நடிகர்கள் என்கிற கணக்கெல்லாம் பார்வையாளர்களுக்குக் கிடையாது. அவர்களைப் பொறுத்தவரை படம் அவர்களுக்குப் பிடித்திருக்கிறதா? அதுமட்டும்தான் முக்கியம்.


**தமிழ் சினிமாவில் பெண் இயக்குனராக தொடர்ச்சியாக இயங்கி வருகிறீர்கள். ஆண் இயக்குனர்களோடு ஒப்பிடுகையில் பெண் இயக்குனர்களுக்கு இருக்கும் சவால்கள் என நீங்கள் எதனை நினைக்கிறீர்கள்?**

ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகம். ஆணை விட பெண்ணால்தான் குடும்பத்தை நேர்த்தியாக நிர்வகிக்க முடியும். ஆகவேதான் குடும்பத்துக்குள்ளான பொறுப்புகள் பெண்ணுக்கும், குடும்பத்துக்கு வெளியிலான பொறுப்புகள் ஆணுக்கும் வழங்கியது நமது குடும்ப அமைப்பு. எனக்கு பணம், புகழ் இவற்றை எல்லாம் தாண்டி என் குடும்பம்தான் முக்கியம். குடும்பத்தில் எனக்கான பொறுப்புகளை செய்து விட்டுத்தான் மற்ற பணிகளை மேற்கொள்ள முடியும். இது போன்றுதான் எல்லா பெண்களுக்கும். ஆகவேதான் திரைப்பட இயக்கம் போன்ற டெக்னீசியன்களில் ஆண்களைக் காட்டிலும் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. மற்றபடி எல்லா இடத்திலும் தான் பெண்களுக்குப் பிரச்சினை இருக்கிறது. அதுபோல்தான் திரைத்துறையும். அதற்கெல்லாம் பயந்து வாழ முடியாது. பெண்கள் முன்னேற வேண்டும் என இங்கே யாரும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. நாம்தான் நமது தொடர்ச்சியான செயல்பாடுகள் மூலம் நமக்கான இடத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்.

**பெண்களுக்கெதிரான வன்மத்தைத்**

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)




TRIDEL
BUILT FOR LIFE
WESTERLY
NEW PROJECT BY TRIDEL
(DUNDAS/ISLINGTON)
Storeys 20
Units 257
Sizes from 502SF to 1120SF
Walk to Islington subway
Get VIP Platinum Access to the Best Units and the Best Pricing
416.321.6969
HomeLife / GTA Realty Inc. Brokerage*
HOMELIFE
5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated


நம்மை நாமே
காத்துக் கொள்வோம்!
முழங்கையால் மறைத்து இருமலாம்
உங்கள் கைகளைக் கழுவுங்கள்
2 m
எப்போதும் 2மீ இடைவெளிவிடுங்கள்
உங்கள் முகத்தை மறைக்கவும்
அனைத்து வகையான பொது போக்குவரத்திலும், மூடப்பட்ட அல்லது ஓரளவு மூடப்பட்ட பொது இடங்களில் 10 வயது அல்லது அதற்கு மேற்பட்ட அனைவருக்கும் இந்த வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியது கட்டாயமாகும்.
Québec.ca/coronavirus
1 877 644-4545
Votre gouvernement
Québec

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
**416 431 5000**
**www.timelesstoday.com**

திரு. பிரேம் ராவத் (Prem Rawat) அவர்கள், பல நாடுகளிலுமுள்ள 100 கோடிக்கும் அதிகமான மக்களிடம் "அமைதியை உணர்வது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியம்" என்று உரையாற்றி வருகின்றார். அவரது உரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை இங்கே பகிர்ந்து கொள்கின்றோம்.

உங்கள் வாழ்க்கையைப் பூரணமாக்கும் நான்கு வழிமுறைகள். உங்களிடம் மிகவும் அழகான 'உள்ளம்' என்ற ஒன்று உள்ளது. அது வெளிப்புறச் சூழலினால் எதுவித பாதிப்புக்கும் உள்ளாகாமல், எப்பொழுதுமே ஆனந்தம் தரவல்லது. "உள்ளம்" அழகை விரும்புகின்றது. உள்ளத்தின் அனுபவம் இனிமையானது, மனிதனை பரவசமடையச் செய்கின்றது. எல்லோராலும் இந்த மகிழ்வை அனுபவிக்க முடியும். நீங்கள் யாராக இருந்தாலும், எந்தச் செயலைச் செய்துகொண்டு இருந்தாலும் வெளிப்புறச் சூழலினால் உங்கள் அகமகிழ்ச்சி எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது. உங்கள் கவனத்தை உள்நோக்கித் திருப்பினால் மட்டுமே நீங்கள் இந்த அனுபவத்தை உணர முடியும். அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கான நான்கு முக்கியமான விடயங்களை உங்களிடம் கூற விரும்புகின்றேன்.

முதலாவதாக, "தன்னைத்தானே உணர்தல்" (Know Thyself). தன்னைத்தானே உணராதவனுக்கு, தான் யாரென்று அறியாதவனுக்கு, ஆயிரமாயிரம் கேள்விகள் மனதில் தோன்றும். மனம் அங்கும் இங்கும் அலைமோதிக் கொண்டிருக்கும். தன்னைத் தானே அறிந்து கொண்டால், உலகவிடயங்களில் இருந்து சிறிது விலகி அதற்கப்பால் உள்ள விடயங்களை அனுபவிக்க முடியும். அந்த அனுபவம் அனைத்து மனிதரின் உள்ளத்திலும் உள்ளது. அதனை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இரண்டாவதாக 'நன்றியுணர்வு' (Gratitude) உங்கள் உள்ளத்திலே நன்றியுணர்வு இருக்க வேண்டும். நன்றியுணர்வு ஏற்படும் போது உங்களால் பாராட்டை (Appreciation) தெரிவிக்க முடியும். பாராட்டுதல் மீண்டும் மீண்டும் நன்றியுணர்வை மனிதனின் உள்ளத்தில் தோற்றுவிக்கும். பேராசை கொண்டவனுக்கு பாராட்டத் தெரிவதில்லை. பேராசை கொண்டவன் பாராட்ட தொடங்கும்போது பேராசை அழிந்துவிடும், ஆனால் அவன் அதைச் செய்வதில்லை.

மூன்றாவதாக, "விழிப்புணர்வு" (Conscious) இந்த வாழ்க்கையை விழிப்புணர்வுடன் கொண்டு செல்லுங்கள். பல விடயங்களை மக்கள் செவிமடுத்துக் கேட்க விரும்புவதில்லை. ஒரு வேளை அவர்களுக்கு அது போலியான விடயம் போன்று தோன்றலாம். உங்களுக்கு ஓர் சிறிய கதையைக் கூற விரும்புகின்றேன். குள்ளநரியானது பல தடவை உயரத்தில் இருக்கும் திராட்சைப் பழங்களைப் பறித்துண்ண முயன்றது. மீண்டும் மீண்டும் முயற்சித்தும் அந்தப் பழத்தைப் பறிக்கமுடியவில்லை. அதனால், 'எட்டாப் பழம் புளிக்கும்' என நினைத்து தனது முயற்சியைக் கைவிட்டு விட்டது. இவ்வாறுதான் மக்களும் தங்களின் உள்ளே சென்று, அழகிய அந்த அனுபவத்தை ஒருபோதும் தாம் பெற முடியாது என்று நினைக்கின்றனர். மேலும் அப்படியான விடயங்கள் எதுவுமே கிடையாது என்றும் நினைத்து விலகி நிற்கின்றனர். ஆனால், உண்மையாகவே நீங்கள் இந்த அனுபவத்தைப் பெறமுடியுமென நான் கூறவிரும்புகின்றேன். நாம் அகக்கண்ணால் உள்நோக்கிப் பார்க்கும் பொழுதும், உள்ளேயுள்ள இறை சக்தியை அறிந்து கொள்ளும் பொழுதும் வாழ்வில் பல வர்ணங்களை நிச்சயமாக அனுபவிக்க முடியும்.

நான்காவதாக, "தோல்வியை ஏற்றுக் கொள்ளாமை" (Do not accept failure) நீங்கள் ஒரு சிறிய குழந்தையாக இருந்த போது, எப்படி நடக்க வேண்டும் என்று கற்றுக் கொண்டிருந்தபோது, மீண்டும் மீண்டும் தோல்வியடைந்தீர்கள். ஆனால் நீங்கள் தோல்வியை ஏற்கவில்லை. நீங்கள் மீண்டும் எழுந்தீர்கள். ஆனால் இப்பொழுது மனச்சோர்வு "கடவுளே எனக்கு என்ன நடக்கப் போகிறது நான் தோற்று விட்டேனென குழப்பம் அடைகின்றீர்கள். குழந்தை தோல்வியுற்றது ஆனால் தோல்வியை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாததால், குழந்தை வெற்றி பெறுகிறது. ஆனால் நீங்கள் தோல்வி யடைகிறீர்கள், உடனடியாக தோல்வியை ஏற்றுக்கொள்கிறீர்கள், நம்பிக்கையை இழந்து விடுகின்றீர்கள். வாழ்க்கையே முடிந்து விட்டதாக நினைக்கின்றீர்கள். மற்றவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப்பற்றி கவனிப்பதை நிறுத்தி, உங்களால் முடிந்தவரை எழுந்து நடந்து வாழ்க்கைப் பயணத்தை அர்த்தமுள்ளதாக்குங்கள்.

தன்னைத்தான் அறிந்து கொண்டால் மனதில் அமைதி நிலவும். நன்றியுணர்வு மகிழ்ச்சியை தரும். தோல்வியை ஏற்றுக் கொள்ளாதவரை நம்பிக்கையிருக்கும். விழிப்புணர்வுடன் வாழக்கற்றுக் கொண்டு விட்டால் வாழ்க்கை மிகவும் அற்புதமாக இருக்கும். நான் ஏன் இங்கு பிறந்திருக்கின்றேன்? எனும் கேள்வி மனதில் தோன்றாது. இந்த மானிட வாழ்க்கை கிடைத்ததற்காக படைத்தவனுக்கு கோடிக் கணக்கான நன்றிகள் கூறுவீர்கள். அப்பொழுது வெளியே எவ்வளவுதான் பாதகமான சூழ்நிலை இருந்தாலும், அது போர்க்காலமாகவோ அல்லது வைரஸ் தொற்றுக் காலமாகவோ இருக்கலாம். அவை எமது மனத்தை ஒருபோதும் பாதிக்காது.

2020ஆம் ஆண்டின் மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மக்கள் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பார்த்து மிகவும் பெருமையாக நினைக் கின்றனர். அதனால் நாம் எதையும் சாதித்து விடமுடியுமென நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உங்களின் உண்மையான வாழ்விற்கு இவை பலன்தர மாட்டாது. நாம் மிகவும் குறுகிய காலமே இந்த உலகில் வாழப் போகின்றோம். எத்தனை நாட்கள் இவ்வுலகில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு நாளையும் நாம் பூரணமாக ஏற்றுக் கொண்டால் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும். சத் என்ற உண்மையுடன் சித் என்ற உள்ளத்தை இணைத்து ஆனந்தத்தை உணரமுடியும். உங்கள் வாழ்வை முழுமையாக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. உங்களுக்கு இந்த மனிதப் பிறவி கிடைத்திருக்கிறது. விலை மதிக்கமுடியாத மூச்சு வந்து போய்க் கொண்டிருக்கின்றது. ஆகையால் இந்த சந்தர்ப்பத்தை தந்த இறைவனுக்கு நன்றி உடையோராக இருந்து உங்களினுள்ளே உள்ள இறை சக்தியை கண்டறிந்து, கிடைக்கப்பெற்ற அழியாத அனுபவத்தை உங்கள் வாழ்க்கையில் கண்டு கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையை பூரணமாக்குங்கள்.

'எனது நம்பிக்கை மனிதனில் உள்ளது', 'எனது நம்பிக்கை இந்த மூச்சில் உள்ளது', 'எனது நம்பிக்கை மனிதனின் உள்ளேயுள்ள உயிர்சக்தியில் உள்ளது'.



Math tutorial 420

Answers to tutorial 419

1) $l_1: \vec{r} = (4, 7, -1) + t(4, -8, -4)$

$L_2: \vec{r} = (1, 5, 4) + u(-1, 2, 3)$

Equating components and rearranging them gives

4t+u =-3 (1)

8t-2u =-2 (2)

4t+3u = -5 (3)

Solving gives t=-1/2 ,u= -1 which also satisfies (3) therefore the two line intersect at (2, 3 ,1 ) .The directions are $\vec{d}_1 = (1, 2, -1)$ and $\vec{d}_2 = (-1, 2, 3)$

$\vec{d}_1 . \vec{d}_2 = 0$ therefore the two lines intersect at right angles

2)Since (-6 ,4 ) =2(3 ,-2 )we can use (3 ,-2 ) as normal to the line .The eqn. must be of the form

3x -2y +c =0 , since the point (-3 ,-7 )lies on the line

3(-3) -2(-7) +c =0 ,c =-5 , The eqn. of the line is 3x-2y-5 =0

3)Soln. $f(9) = \sqrt{9} = 3$, $f(9+h) = \sqrt{(9+h)}$

$M = \lim_{h \to 0} \{f(9+h) - f(9)\}/h$

$= \lim_{h \to 0} \{\sqrt{(9+h)} - 3\}/h$

$\lim_{h \to 0} \{\sqrt{(9+h)} - 3\}/h \times \sqrt{(9+h)} + 3$ divided by $\sqrt{(9+h)} + 3$

$\lim_{h \to 0} 1/\{\sqrt{9+h} + 3\}$

=1/6

Tutorial 420

Questions

1)Given that cscA =sec 0.75 and that A lies in the $2^{nd}$ quad. Determine the measure of angle A to 2 decimal places

2)State whether each function has an even number of turning points or an odd number

a) $22x^4 - 4x^3 + 3x^2 - 2x + 2$ (b) $-x^5 + x^4 - x^3 + x^2 - x + 1$

## பெண்கள்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

**தூண்டுவதில் திரைப்படங்களுக்கு முக்கியப் பங்கு இருப்பதாகப் பல குற்றச்சாட்டுகள் எழுகின்றன. சமீபத்தில் இயக்குனர் செல்வராகவன் கூட தனது படத்தில் இடம்பெற்ற ஒரு பாடலுக்காக மன்னிப்பு கோரினார். இந்தப் போக்கை எப்படி மாற்றி அமைக்கலாம்?**

இத்தனை ஆண்டுகளாக பெரும்பாலான திரைப்படங்கள் காதல் என்பதை மிகவும் தவறான புரிதலோடுதான் அணுகியிருக்கின்றன. பெண் வேண்டாம் என்று மறுத்தாலும் அவளை விடாமல் பின் தொடர்ந்து, இம்சை கொடுப்பதையே காதல் எனக் காட்டி வந்திருக்கிறார்கள். பெண்களை ஒரு மோகப்பொருளாக சித்தரித்திருக்கின்றனர். இது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் அதிகம். திரைப் படங்களில் சித்தரிக்கப்படும் காட்சிகள் சமூக மனநிலையில் தவறான எண்ணத்தை விதைக்கும் அளவுக்கு வலிமையானவை. காதலிக்க மறுத்த பெண்ணின் மீது திராவக வீச்சு, அரிவாள் வெட்டு ஆகிய செயல்களில் ஈடுபடுவதற்கு சினிமாவும் ஒருவிதத்தில் உந்துதலாக அமைந்திருக்கின்றன. ஆக திரைப் படைப்பாளிகளுக்கு சமூக அக்கறை மிகவும் அவசியம். காதலைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பதைத்தான் இப்படத்தில் காட்டியிருக்கிறேன். வெறுமனே இப்படியான படங்களைக் கண்டு கொந்தளிப்பதற்குப் பதிலாக நல்ல படத்தை நாமே எடுத்துக் காட்டுவோம் என்கிற முயற்சியே இது. சமூகப் பொறுப்புணர்வோடு இப்படத்தை இயக்கியிருக்கிறேன். என்னுடைய எதிர்பார்ப்பு ஒன்றுதான். இது போன்ற படங்களை மக்கள் வரவேற்க வேண்டும். தியேட்டரில் சென்று பார்ப்பதே அவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பாக இருக்கும். இதன்மூலம் தொடர்ச்சியாக பெண்களை மையப்படுத்திப் பல படங்கள் வெளியாகும்.



**திரைத்துறையில் இருக்கும் 'காஸ்டிங் கௌச்' பற்றியும் அதற்கு எதிராக எழுந்த மீ டு இயக்கம் குறித்தும் உங்கள் பார்வை பார்வை என்ன?**

பெண்கள் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவது அவசியம் எதிர்க்கப்பட வேண்டியது. அதற்கான 'மீ டு' இயக்கமாக உருவானபோது அது கேலிக்குள்ளாக்கப்பட்டது வேதனையானது. முதலில் ஆண்கள் தங்களது சிந்தனைகளையும், புரிதல்களையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும். எந்த சூழலிலுமே ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாமல் அவளை நிர்ப்பந்தப்படுத்துவது தவறு என்பதை உணர வேண்டும்.

**நீங்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்த 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சி தடை செய்யப்பட்டிருப்பது பற்றி...**

இதில் சொல்ல எதுவுமில்லை. முழுமையான அர்ப்பணிப்பு உணர்வோடும், அதற்கான நேர்மையுடனும்தான் அந் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினேன்.

## சினம்




உள்ளத்தை குணத்தை முன்வை முன்னாலே
சினம் என்னும் மூன்றெழுத்தை சிரமேற் கொள்ளாதே
சிறிதளவேனும் சினத்துக்குச் சுமையானால்
சிதறிடும் உன் வாழ்க்கை அதனாலே

சினப்பட்டு சினப்பட்டு செயல் ஆற்றும் கருமங்கள்
யாவும் சிதைபட்டு செயல் இழந்து போகும்
உண்ணும் உணவைக்கூட சினப்பட்டு உண்டால்
அது உடம்பில் சிறிதளவேணும் சுவறாது

இல்லான் இல்லாளோடு சினப்படுவானே ஆனால்
இல்லாளின் துணை இல்லானுக்கு இல்லாது போகநேரும்
அதனால் இளையோரும் ஒருவருக்கொருவர் சினப்படுவர்

அகத்துச் சிரிப்பையும் முகத்து மகிழ்ச்சியையும் அழிக்கும்
சினத்தை வெறுத்தால் நினைத்தவை எல்லாம் கிடைக்கும்
சிரித்து வாழ்ந்த குடும்பத்தில் சினம் குடிகொண்டால்
பிறர் சிரிக்க வாழவேண்டி வரும்

குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து வாழ்ந்தால் அது ஒரு
குதூகல குடும்பமாகும். அங்கே நாள்தோறும் பெருகும் இன்பம்.
அதனால் சினத்தை வெறுத்துச் சீருடன் வாழ்வோம்.
"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இளம் என்னும் ஏமப்புணையைச் சுடும்" என்றார் வள்ளுவர்



கவிநாதம் பரந்தாமன்




ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்
போல் ஐன்ஸ்லி
வட்டாரம் 24, ஸ்காபரோ - கில்வூட்

TORONTO

உதவி தயாராக உள்ளது
தொகுதியில் வாழ்வோருக்கான ரொறன்ரோ நகரசபை சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண்பது எமது சேவை

- வசதிக்கேற்ற விலையில் வீடுகள்
- வளர்ப்பு பிராணிகள் மற்றும் விலங்குகளுக்கான சேவை
- அடுக்கு மாடிகளுக்கான தரநிலை • நூலகம்
- கட்டிட அனுமதிப்பத்திரம் • குப்பை அகற்றல்
- குழந்தை பராமரிப்புக்கான மானியம் • நகரசபைத் தேர்தல்
- அவசரகால வதிவிட வசதிகள் • தீயணைப்பு சேவை
- நகராட்சி உரிமம் மற்றும் தரநிலைகள்

எமது சமூக தொடர்பு சாதனங்களும், வலையத் தளமும் தினமும் பதிவேற்றம் செய்யப்படுவதால், தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள பின்வரும் தகவல் சாதனங்களைப் பாவிக்கவும்.

Twitter: @Ainslie_Ward24 Instagram: @cllrainslie
Facebook: @ward24scarboroughguildwood

- "ஒன்றாரியோ வேலைகள்" நிறுவனத்தின் சேவைகள்
- வாகனத்தரிப்பிடம்
- சோலைகள் • பொதுப் போக்குவரத்து
- நகர்காவலர் சேவை • மரங்கள்
- பொதுச் சுகாதார சேவை • குடிநீர்
- தெருக்கள் • ஆதன வரி
- மீள்சுழற்சி மற்றும் உணவுக்கழிவு பசுமைத் தொட்டி

பொது சுகாதார சேவை அலுவலகத்தின் தகவல் தொலைபேசி இலக்கமும் 311 என்ற இலக்கமும் அதி கூடிய அழைப்புக்களை ஏற்றுக்கொள்வதால், ரொறொன்ரோ மாநகரசபையின் www.toronto.ca/covid19 என்ற வலையத் தளத்தில் 53 மொழிகளில் உங்களுக்கு வேண்டிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

CONSTITUENCY OFFICE
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

TORONTO CITY HALL OFFICE
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4006
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

## வாடகைக்கு கொடுப்பவர்களின் கவனத்துக்கு!

வாடகையாளரை நீங்கள் தெரிவு செய்யும்போது குறிப்பிட்ட வாடகையாளரின் தகவல்களைப் பெறுவது, எதிர்காலச் சிக்கல்களை நீக்கும். தகுந்த வாடகையாளரைத் தெரிவு செய்வதற்கு குறிப்பிட்டவரின் முழுத்தகவல்களைப் பெறுவதுடன் அவரைப்பற்றிய தகவல்களை கணினியின் உதவியுடன் உறுதி செய்வதும் நல்லது. அத்துடன் அவரைப்பற்றி அறிந்து கொள்வதற்கான வேறொருவரின் (Personal Reference) தொலைபேசி எண்ணையும் பெற்று வாடகையாளர் பற்றி அறிந்து கொள்ளுங்கள். (வாடிக்கையாளர் பற்றிய தகவலைப் பூர்த்தி செய்வதற்கான பத்திரம் (Rental application form) தேவைப்பட்டால் விளம்பரம் பத்திரிகையுடன் தொடர்புகொள்ளவும்.

## BASEMENT FOR RENT

**MIDLAND & EGLINTON**
2 Bedroom walk out Bsmt for rent.
Close to all facilities.
**647.978.2785 / 905.201.8525**

**TAUNTON & SIMCOE (Oshawa)**
3 Bedroom fully renovated bsmt for rent. Sep. Entrance, Laundry, 1 1/2 Washroom, 1 Parking. Family preferred. Avail. November.
**Call or text 647 388 5295**

**MCCOWAN & BRIMORTON**
2 Bedroom Newly renovated bsmt for rent. Sep. entrance, kitchen, parking, laundry. Close to all facilities. Avail. immediately
contact: **647-761-7048**

**SEWELLES ROAD & MCLEVIN**
2 Bedroom Newly renovated bsmt for rent. Near to Malvern Mall. Couple with a little kid preferred. Avail. December 01, 2020.
contact: **647-657-6996**

**KENNEDY & ELLESMERE**
2 bedroom basement for rent. Sep.entrance. 1 parking. 2 minutes to TTC. Close to all facilities. Avail. November 1st.
**(647) 828 - 8376 or (416) 759 - 0626**

**MARKHAM & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Sep. Entrance parking. Close to school, TTC & all facilities. Avail. immediately.
**647-515-1631/416.430.0999**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance Families only 2 Adult & 2 children. Close to schools, Avail. from December 1, 2020.
**905.554.7928 / 647.401.7928**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent, Sep. entrance, Include kitchen, washroom & Sep. laundry. Close to all facilities.
**Call or Text - 647.833.8597/647.539.2860**

**ELLESMERE & ORTON PARK**
2 Bedrooms Newly Renovated Basement For RENT! No Pets. Kitchen, Washroom, Parking. Available Immediately!
**Call at (647) 998-0181**

**LAWRENCE & SCARB.GOLF CLUB**
3 Bedrooms, 1 washroom, 1 living room bsmt for rent. Sep.entrance Available Immediately!
தொடர்புகளுக்கு: **416.357.8079**

மேலும் பக்கங்கள் 15, 16, 17, 18

## BASEMENT FOR RENT

**BIRCHMOUNT & ELLESMERE**
2 bedroom basement for rent. Separate entrance .1 parking. Close to all facilities
தொடர்புகளுக்கு: **416.451.9520**

**BRIMLEY & LAWRENCE**
2 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance, Parking Included. Close to Scarb. town center. Student only. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647-883.5571**

**Morningside & Morningview Trail**
2 Bedrooms newly renovated Bsmt for Rent. Living room & 1 parking. family preferred.
தொடர்புகளுக்கு: **(416) 564- 4200.**

**MCCOWAN & DENISON**
2 Bedroom Bsmt for rent. Sep. entrance 1 bathroom Sep. washer and Dryer. Close to all facilities.
**647-680-3167/ 905-294-8316**

**NEILSON & MCLEVIN**
1 Bedrooms Bsmt for Rent. Sep. Entrance. No pets or no smoke. Close to 401, mall, ttc @door uft, centaial, quiet area.
**416.834.1081/kugancanada@yahoo.com**

**MORNINGSIDE & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. Entrance, 1 parking. Students / Couple preferred. Avail. immediately.
**416.455.5546 / 416.267.0072**

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom for rent. Sep. entrance, 1 parking. Most facilities are provided. Avail. November 01, 2020.
**416-464 - 4207/416-431-6349**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep.entrance, laundry, utilities.Close to bus, bank, store. Avail. November 01, 2020.
**647.772.5546 / 647.856.9907**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-613-1792**

**MIDDLEFIELD & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Avail. November 01, 2020.
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Couple couple preferred
தொடர்புகளுக்கு: **416-258.3256**

**BELLAMY & LAWRENCE**
3 bedroom Basement for rent. Sep. entrance, car parking, laundry, Internet. Close to all facilities. Avail. Immediately.
**647.920.3019 / 647.781.3019**

**MIDDLEFIELD & FINCH**
2 Bedrooms renovated Bsmt for Rent. Sep. entrance, sep. laundry. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு : **647-449-7440**

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Rooms Basement Separate entrance, Shared Laundry Room, access to WIFI Reference will be required. Avail. Nov. 01 2020.
**Text after 4 pm only 647.285.4735**

**LIVERPOOL & FINCH - PICKERING**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. 1 parking. Rent $1,100 utilities included. Avail. immediately.
**Call Nathan 416-557-0638,**

**NEILSON ROAD & FINCH AVE. EAST**
1 Bedroom Basement for Rent. Sep. entrance, utilities. No smoking. Single person preferred. Avail. December 01, 2020.
தொடர்புகளுக்கு: **416-835-0273**

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom+1 washroom bsmt for rent. Sept. Entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.434.0082**

**MCCOWAN & BRIMORTON**
Newly renovated 1 Bedroom bsmt with sep.entrance, Rent: $1200+ 40% Utilities. Suitable for a couple or single occupancy.
**Contact: Jude (416.884.0513)**

**KENNEDY & EGLINTON**
Basement apartment for rent. Walk to Subway. Available immediately.
தொடர்புகளுக்கு: **416-833-7729**

**MARKHAM & STEELES**
1 Bedroom new bsmt for rent. Sep.entrance, parking. Female student or family preferred. Close to Bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**MARKHAM & SHEPPARD**
3 Bedrooms & 2 full washrooms bsmt for rent. Rent $1800+50% utilities. No smoke, no Alcohol & no pets. Avail. immediately.
**647.855.2148 / 437.985.6101**

**16TH AVENUE & 9TH LINE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Rent $1,450 +utilities. Close to all facilities. Avail. November 01, 2020. **416.618.3660 / 647.367.0220**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**
1 bedroom for rent in the basement. Sep.entrance & parking. Near Cedarbrae mall & other all facilities.
தொடர்புகளுக்கு: **416.267.0455**

**SCARB.GOLF CLUB RD & LAWRENCE.**
1 Room for rent in a basement of a house shared kitchen and washroom. Rent $450 Per month. Avail. immediately.
**416.454.9986/ 416.219.4936**

**MARKHAM & HIGHGLEN AVE**
சந்திக்கு அருகாமையில் 3அறைகளைக் கொண்ட **bsmt** வாடகைக்குண்டு. Sep. entrance, sep. laundry. Avail. December 01
தொடர்புகளுக்கு: **647-762-5804**

**KENNEDY & EGLINTON**
Rooms for rent( brand new). Sep.entrance. parking. Subway station located walking distance. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647-501-2720**

**LAWRENCE AVE & MORNINGSIDE**
1 Room for rent in a basement. Looking for a Male. Sep.entrance, car parking, and laundry included. Close to TTC & malls.
தொடர்புகளுக்கு : **365.338.3406**

**WARDEN & LAWRENCE**
3 அறைகள் கொண்ட Bsmtஇல் 1 அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் மட்டும். புகைத்தல், மது இல்லாதவர்கள் விரும்பத்தக்கது.
மேலதிக தொடர்புக்கு: **647-708-3444**

**MIDDLEFIELD & FINCH**
1 room available in 2 Bedroom Bsmt. Close to bus route. No parking space. Looking for single Working male only.
**(416)502-3048 / (416)409-5286**

**MORNINGSIDE & STAINES**
1 bedroom for rent in a basement. Shared. Female only. Sep. laundry, sep. entrance, 2 parking. No smoking & No pets. **Contact : 416.388.2794**

**MIDDLEFIELD HIGHGLEN AVENUE**
சந்திப்புக்கு அருகாமையில் வீட்டின் மேல் தளத்தில் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு **: 647.389.7120**

**MARKHAM & STEELES**
1 Room with washroom for rent in a basement. Sep. entrance. No car parking. Close to amazon company. Avail. immediately.
தொடர்புகளுக்கு **: 647-761-8270**

**BRIMLEY & LAWRENCE**
1 Room for rent. Sep. entrance, laundry. Close to S.P. Importers, ect. Avail. immediately.
**416.299.4852 / 647.533.9930**

**9th Line & 14th Ave.**
2 rooms for rent. Laundry and Parking included. Close to YRT/TTC, shops and schools. Available beginning of November.
**(416) 648-1987 or (416) 669-3549**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
1 Bedroom for rent. Sep.entrance, internet. Single or couple preferred. Close to U of T & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.206.3436**

**NELISON & MILITARY TRAIL**
2 bedrooms for rent. Available All amenities included ( Laundy onsite, interne). Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.205.9253**

**WARDEN & ELLESEMERE**
Room for rent. Close to all facilities. Male preferred. Avail. immediately.
**416.274.5306 / 437.233.4848**

**MARKHAM & EGLINTON**
Room for rent in an apartment. Close to all facilities. Students or working women only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.566.1918**

## CONDO FOR RENT

**DONMILLS & HWY 401**
2 Bedroom, 2 Full Bathroom condo for rent. Parking Available. Close fairview mall.
Call: **647-667-0482 or 416-889-3191**

## BASEMENT FOR RENT

**BIRCHMOUNT RD & SHEPPARD AVE**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to main rd, betchelore, girls student welcome. Avail. November 01, 2020.
contact:
**416.899.9199**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep.enterence, kitchen bathroom, parking. Close to all facilities. Avail. immediately.
**437.992.4869**

## BASEMENT FOR RENT

**BELLAMY & ELLESMERE**
3 bedroom Basement for rent. separate entrance, car parking, laundry, Internet. Close to all facilities. Avail. Immediately.
**437.239.4596/647.920.3019**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416-520.0409**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 bedroomsbsmt for rent. Close to Walmart and Costco. Very convenient area for schools and highschools. Has a sep. entrance. 2parking spaces. No smokers and pets allowed. Avail. December 1, 2020.
தொடர்புகளுக்கு: **(647)-761-5599**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 bedroom basement bsmt for rent. Sep. entrance & Sep. laundry. 5 minute walk to Markham road. No pets and no smoking. Looking to rent out to a family. 40% utility. First and last payment required. 1 parking. Avail. Immediately
தொடர்புகளுக்கு : **647-631-5745**

## BASEMENT FOR RENT

**MARKHAM ROAD & MCNICOLL**
1 Bedroom + Dent Basement for Rent.Sep. Entrance. 1 Kitchen, 1 Bathroom, Living room 1 Space for Car Parking School, Walmart, Amazon, Nofrills, Bus Stop accessibility
தொடர்புகளுக்கு: **647-290-5769**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom newly renovated bsmt for rent. 2 washroom, side door, included car parking.
More information please to call:
**647-215-2533/647-588-2533**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Couple or Students preferred.
**MCCOWAN & HIGHGLEN**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Rent+40% utilities. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **647.972.7620**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
3 bedroom , 2 washroom walkout basement for rent. Parking, laundry. Close to school & shopping centers. No smoking & no pets. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.981.1997**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVE - MARKHAM**
3 bedrooms+ 3 bathrooms brand new basement for rent. Sep. entrance, laundry, lots of facilities nearby, 1 car parking, no pets & no smoking. Ready for you to move.
**416-930-3713 / 416-768-1824**

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entranceParking, laundry. Rent+utilities. Close to all facilities. Avail. immediately.
**647.627.0202/416.617.1767**

## BASEMENT FOR RENT

**Markham & Steeles**
2 Bedroom + 2 Full washroom+ Kitchen + Laundry. Newly done basement apartment for rent with 1 car parking. Avail. starting December 01, 2020.
Contact me at: **416.648.0257**

## BASEMENT FOR RENT

**TABSCOTT & FINCH**
3 bedrooms basement for rent. Sep. entrance,1 parking . Close to bus & all facilities. Small family preferred , No alcohol, No smoking, No pet. Avail. November 01, 2020.
தொடர்புகளுக்கு : **647.771.3735**

## ROOM FOR RENT

**MARKHAM ROAD & DENISON**
1 Bedroom for rent in the Basement. Rent $650. Close to all Amenities. Includes 1 spot parking & high speed Rogers internet. Good for a single Bachelor Male. Avail.immediately
தொடர்புகளுக்கு: **416-666 6403**

## ROOM FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 bedroom for rent in a basement. Sep. entrance & parking. Close to subway station, shopping plaza, hospital, grocery stores. Avail. November 01, 2020.
**Kiruparajan : 647-569-5498**
**Sinthu : 647-703-2720**

## ROOM FOR RENT

**MCCOWAN & LAWRENCE**
Room for rent in a Basment. Looking for a Male. Sep entrance, car parking, and laundry included. Close to TTC & malls.
please call : **416.505.4449**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**
2 Rooms For Rent in a walkout basement. Ladies only. Close to all facilities. Aval.immediately.
தொடர்புகளுக்கு:
**647.888.9437**

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**
Room for rent. Close to all facilities. Avail.immediately .
தொடர்புகளுக்கு:
**647.721.0838**

## CONDO – TOWNHOUSE FOR RENT

Location: **9th Line & HWY 7,** directly facing **Stouffville** Hospital. Two bedrooms, Two full bathrooms (Ground level) with Parking & Locker room. Available immediately.
**Call: 416.464.3551**

## HOUSE FOR RENT

**Ellesmere & Orton Park**
MAINFLOOR for RENT. 3 Bedroom Newly Renovated No Pets. Washroom, kitchen, Parking. Avail. immediately.
**Call at (647) 998-0181**

**BELLAMY & LAWREMCE**
3 bedrooms bungalow house for rent. Parking. Close to all facilities. Avail. November 01, 2020.
**416.671.0085 / 647.960.6427**

**9Th LANE & 14Th AVENUE (MARKHAM)**
4 bedrooms+3 washrooms house for rent. No pets, No smoking. Rent $ 2,290. Close to all facilities. Avail. immediately.
**416-918-9848 / 416-857-7603**

## HOUSE FOR RENT

**HARWOOD & ROSELAND**
Ajax, Ontario - For Rent – free hold townhouse - 2,000 sq.feet - 3 bedrooms – 2.5 bathrooms. 3 Bedroom. Hardwood Floor On Family/Living Room. Steps to Schools, Shopping, Parks. Spacious Kitchen W/O To Private Fenced Yard.
**Contact number: 647.656.6214.**

## HOUSE FOR RENT

**MARKHAM & DENISON**
4 bedrooms house for rent. Parking. Close to all facilities. Close to all facilities. Avial. December 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.897.3195**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTAIL**
1 bedroom basement for rent. 3 bedrooms house for rent In **SCARBOROUGH** area.
தொடர்புகளுக்கு:
**647.686.8590**

## HOUSE/CONDO FOR RENT

**DETACHED HOUSE FOR RENT**
**14th AVE. & MCCOWAN**
4 Bedrooms, 3 Washrooms. Rent $2,500. ( Basement also available)
**Condo. for rent in Scarborough**
1+1 Bedrooms, 2 Washrooms. $1,700.
**Call @ 416-709-5000**

## HOUSE FOR RENT

**TAUNTON & HARMONY**
4 Bedroom new house (Main floor) Includes 3 parking lot . No pets and no smoking inside the house. All Utilities included and close to shopping Centers
Adress : Graham clapp Ave , Oshawa
**Contact number : 647-787-3784**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**
4 bedroom & 3 washroom house for **Sale.**
**NEILSON & SHEPPARD**
2 bedroom & 2wasroom Houses for **Rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
வாடகைக்கு உள்ளது அழையுங்கள்.
**647.861.8240**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு
அழையுங்கள்: **416.880.5952**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## HOUSE FOR RENT

**BRIMLEY & FINCH**
3 bedroom semi detached house for rent. 2 parking.
Close to all facilities.
Avail. December 01, 2020.
**416.298.0134 / 647.449.7709**

## HOUSE FOR RENT

**MIDLAND & MCNICOLL**
3 Bedroom + 2 washroom house with finished basement ( 2Bed+1 washroom) for rent.
Close to all facilities.
**Contac: 647.542.4439**

## HOUSE FOR RENT

**MARKHAM & PAINTED POST**
3 Bedroom+1 washroom house for rent
**SHORT TERM RENT**
Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.434.0082**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்காபரோவில் வாழும் Wheel Chairஇல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை வீட்டில் இருந்து பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை.
Full time LIVE-IN caregiver (female) needed asap in Scarborough.
தொடர்புகளுக்கு: **437.223.7767**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## திருமணசேவை

திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.**
தொடர்புகளுக்கு: பிறேம்-**647.835.5244**

## HOUSE FOR RENT

**MARKHAM & LAWRENCE**
Newly Renovated Bungalow House for Rent (Top Floor). 3 Bedrooms + Laundry, Washroom, Kitchen, & Living Room. 2 Parking Spots (Walking Distance to Bus Stops, Cedarbrae Mall, Grocery Stores, Schools etc). Avail. immediately.
**Please call or text : 647-990-5969**

## HOUSE FOR RENT

**WESTNEY & KINGSTON (Ajax)**
3 bedroom house for rent.
Parking, laundry.
Close to all facilities.
Avail. Immediately.
**416.525.4288/416.333.5606**

## பராமரிப்பாளர் தேவை

**MARKHAM & MCNICOLL**
7 மாத குழந்தையை வீட்டிற்கு வந்து பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
**647.763.1706**

## FOR RENT

**HOUSE FOR RENT**
**NEILSON& MCLEVIN - Scarborough**
3 bedroom 2 story detached house with 2 bedroom bsmt with 2 car garage full house for lease. Avail. November 01, 2020.

**BASEMENT FOR LEASE**
**9th LINE & 14TH AVENUE-Markham**
2 Bedroom fully renovated bsmt with 2 car parking, sep. laundry.
Avail. immediately.

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

## HELPER WANTED

வீட்டுத் திருத்தவேலைகளுக்கு முழுநேர உதவியாளர்கள் தேவை
செல்வா: **416-824-0580**

மேலும் பக்கங்கள் 14, 15

## ROOM FOR RENT

**MCCOWAN & HIGHGLEN**
4 bedrooms are available in a basement.
Newly renovated. Appliances included.
Close to all facilities.
**Contact information : +1 (437).388-3961 (Rahu)**

## BASEMENT FOR RENT

**Neilson & Military Trail**
Two bedroom basement for rent, Separate Entrance at two bed rooms basement , kitchen and washroom is available for rent. Walking distance to School, bus stop, Centennial College and UOTS.
Parks and Grocery stores, hospitals are within 5 minutes walking distance. One parking available, Any time available.
**Contact me : 647.290.3904.**

## BASEMENT FOR RENT

**AUDLEY & ROSELAND AJAX**
1 Bedroom + Den - next to bus stop, close amenities, parks, school and restaurants. No pets or smoking, parking included, separate laundry 30% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416-895-5219**

## DRIVER/WAREHOUSE WORKER WANTED

We are looking for a driver/warehouse worker with clean driver's record. Must have G licence. Tamil/ Hindi or Punjabi speaking. Monday to Friday 9am - 5:30pm. Up to $20 Per hour. Hiring Immediately.
All inquiries to be emailed to: **pankajs37@hotmail.com**

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!

## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

**எமது சேவைகள்:**

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும் பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக்கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறை களைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

**You can relax while we take care of your investment property!**

WATSON PROPERTY MANAGEMENT LTD

Direct: 416-284-9999
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

---

# wpm Property Management

***Markham* - Markham / Major Mackenzie – Bsmt**
(2 Brm + 1Bath) Great Location. Completely Renovated. Close To Ttc, Hwy 407, Schools, Hospital, Go transit. 1 Parking **[Asking $1550/m]**

*** *Scarborough* – Ellesmore Rd / Military trail – Bsmt**
1 Room Available for Students Or Professional. Rent included Utility & Internet. Walking distance to U Of T Scarborough. Close to Close to Ttc & Hwy 401. **[Asking - $550/m]**

*** *Scarborough* – Ellesmore Rd / Military trail – Bsmt**
2 Rooms Available for Students Or Professional. Near U Of T Scarborough / Centennial College. Close to Ttc & Hwy 401. **[Asking each- $550/m]**

***Scarobrogh- Votoria Park / Ellesmore – Detached - Bungalow**
(3 Brm + 1 Bath) Main Floor for lease. Easy Access To Highways 401/404 Dvp, Ttc. **[Asking each- $2300/m]**

*** *Scaroborugh* –Markham & Painted post drive- Bungalow**
(3 Brm + 1 Bath) Spacious 3 Bedroom house in a great location. 2 Parking spaces. **[Asking each- $2300/m]**

*** *Scaroborugh* – Kennedy & Hwy 401- Detached**
(1 Brm + 1 Bath) 1 Parking Available. Close To 401, Shopping, Library, Restaurants And Ttc **[Asking each- $1695/m]**

***Toronto – Yonge & Finch - Condo Apt**
(1+1Brm + 2Bath) Prime Location! Yonge And Finch. Steps To Subway, Park, North York Center, Shops, Ttc. **[Asking each- $1900/m]**

***Brock – King & Mara Rd- Detached**
(4 Brm + 3 Bath) Double Garage. Walking Distance To Park, School, Marina, Golf, Banks And Shopping **[Asking each- $2500/m]**

➡ வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் தேட விரும்புகிறீர்களா? அல்லது

➡ ஏற்கனவே நீங்கள் வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டில் வாடகைப் பிரச்சனைகளின் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்க நம்பிக்கையான நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

➡ நீங்கள் ஏற்கனவே வாழ்ந்துவரும் சொந்த வீட்டிலிருந்தே கடனை எடுத்து வீட்டை வாங்கும் தகுதி உங்களுக்கு இருக்கலாம்.

இத்துறையில் எனது 32 வருட அனுபவமும் எமது (WPM) Property Managemant நிர்வாகமும்
இதை உங்களுக்கு திருப்திகரமாக செய்து தரும் என்பதை முழுதாக நம்பலாம்.

**நம்பிக்கையுடன் அழையுங்கள்: கரு கந்தையா 416.616.7278**

**MANAGING RESIDENTIAL PROPERTIES**
**Watsonpm1989@gmail.com**

## CLEANERS WANTED

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.

Looking for independent cleaners for a startup company in Scarborough. The work will be on a daily basis.

Previous experience will be an asset. Freshers are also welcome.


**Contact at : 647.832.6899**

## ONLINE MATH TUTORING

**Canadian female college professor**

currently teaching **Math online** for Grade 6, 7, 8, and 9

- **Free first lesson**
- **Abi 289.988.9202**
- **ajaxprivatetutor@gmail.com**



## AZ/DZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately (At least one year) for long & short run with in Canada. Full time, Part time & on call. SPS Transporation Private LTD. **647.528.2224 / 647.830.4644**

## கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்

### அறிவித்தல்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது. கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.**

நன்றி.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.

தொடர்பு இலக்கம்: 647 619 3619 ctro@tamilremembrance.com

## சந்திரமௌலீஸ்வர சிவாலயம்



தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416.754.7338 / 416.724.7480**

3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

தேவையான அளவுக்கு சம்பாதித்துவிட்டு அதன்பிறகு நம்வாழ்க்கையை நாம் வாழ ஆரம்பிக்க வேண்டும் என்று நினைக்கும் பலர் அந்த எல்லைக்கோடு எங்கே இருக்கிறது என்று தெரியாததால் கடைசிவரை சம்பாதித்துக்கொண்டே இருக்கின்றனர் 'வாழாமலே'.



வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 14, 15, 16, 17, 18

# JOBS! JOBS! JOBS!

## TEMP EMPLOYMENT AGENCY



- **General Labor**
- **Packers**
- **Machine operator**
- **Forklift operator**

**NOW HIRING**

**Note: Must be able to lift heavy packages**

**Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR**

**80 Nashdene Rd. Building - D Unit 89**
**Scarborough ON. M1V 5E4**

# பனை நேசிக்கப்படுகிறது - நாடும் நடப்பும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

புல்லினத்தைச் சேர்ந்த ஒரு தாவரப் பேரினம். அறிவியல் வகைப்பாட்டில் இதைப் பேரரசு (borassus) என்னும் பேரினத்தில் அடக்குவர். பனைகள் பொதுவாகப் பயிரிடப்படுவதில்லை. இயற்கையிலே தானாகவே வளர்ந்து பெருகுகின்றன. பனை வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு 15 ஆண்டுகள் எடுக்கும் எனக் கூறப்படுகின்றது. சுமார் 30 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியவை. இதன் உச்சியில் கிட்டத்தட்ட 30 - 40 வரையான விசிறி வடிவ ஓலைகள் வட்டமாக அமைந்திருக்கும். பொது வழக்கில் மரம் என்று தமிழில் வழங்கப்படினும் இது மரவகையை சார்ந்ததல்ல. பல வகையான பயன்களை நெடுங்காலத்துக்குத் தருவதால் பனையை கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரம் எனவும் கூறுவர். பனை மரத்தில் 34 வகைகள் உண்டு. இது ஆபிரிக்காவை தாயகமாகக் கொண்டது எனக் கூறப்படுகிறது. இது மக்கள் வாழும் பகுதிகளின் அருகிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. பனை வறட்சியை தாங்கக் கூடிய வலிமை உள்ள மரம். இலங்கையில் தமிழர் வாழும் இடங்களில் அதுவும் வடபகுதியிலேயே அதிகம் காணப்படுகின்றது.

பனை மரம் உணவு மற்றும் உணவிலிப் பொருள்களை நல்கிறது. உணவுப் பொருள்களில் பதநீர் முதன்மையானது. இதுவே கருப்பட்டி, வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனம்மிட்டாய், பனங்கூழ், நுங்கு எனப்பல்வேறு உணவுப் பொருள்களாக வடிவம் பெறுகிறது. கள்ளு எனும் மதுபானம் தயாரிக்கப்படுகிறது. பனங்கிழங்கு நார்ச்சத்து நிறைந்த சத்துள்ள உணவாகும். பனந்தும்பு, தூரிகைகள், பனையோலைப் பொருள்கள், அலங்காரப் பொருள்கள், மரப்பொருள்கள், ஓலை, விசிறி, கூடை, பாய் ஆகியன பனையில் இருந்து பெறப்படும் உணவிலிப் பொருள்களாகும். பனையின் நுனியிலிருந்து நிலத்தின் கீழ் உள்ள வேர் வரையிலும், முளைவிட ஆரம்பித்ததிலிருந்து வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னரும், நெடுங்காலத்துக்குப் பனைகளால் பயன் உண்டு. இதனால் தான் இதனை பூலோக கற்பகதரு எனக் குறிப்பிடுகின்றனர். வசதியற்ற ஏழை மக்களின் பொருளாதார நிலை உயர அடித்தளமாக விளங்குகிறது.

பனங்கற்கண்டு சுத்திகரிக்கப்படாத அல்லது தூய்மைப்படுத்தப்படாத சர்க்கரை ஆகும். பனை மரத்திலிருந்து இது பெறப்படுவதால் இதை பனங்கற்கண்டு என அழைக்கின்றனர். இதில் குறைந்த அளவு இனிப்புச் சுவை இருப்பதால் நமது உடலுக்கு மிகவும் பாதுகாப்பானது. நமக்கு ஏற்படும் சின்னச் சின்ன உடல் உபாதைகளுக்கு இதை வீட்டில் பயன்படுத்துகின்றனர். இதில் விற்றமின்கள், தாதுக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன. இதில் உள்ள சத்துகள் ஒருவருக்கு ஏற்படும் ஆஸ்துமா, அனிமியா, மூச்சுப்பிரச்சினை, இருமல், சளி, இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரகப் பிரச்சினை போன்றவற்றுக்குப் பயன்படுகிறது. சிறிது பனங்கற்கண்டு, பாதாம் பருப்பு, சீரகம் சேர்த்து இரவில் படுப்பதற்கு முன் சாப்பிட்டு வந்தால் நினைவாற்றல், கண்பார்வை அதிகரிக்கும். சோர்வாக இருந்தால் ½ கரண்டி பசுமாட்டு நெய்யுடன் சிறிது பனங்கட்டி, நிலக்கடலை சேர்த்து சாப்பிட்டால் சுறுசுறுப்புள்ளவராக மாற்றிவிடும். தொண்டை கட்டிக் கொண்டால், பேசமுடியாமல் இருக்கும். ½ கரண்டி மிளகுத்தூள், ½ கரண்டி நெய், மற்றும் ½ கரண்டி பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டை வலி குணமாகும்.



கிளிநொச்சி, பளை முல்லையடிப் பகுதியில் 14 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடன்கூடிய பனை வெல்ல உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபை பனம் பழத்திலிருந்து பனம் களியை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பான பயிற்சிகளை உற்பத்தியாளர்களுக்கு வழங்கியுள்ளது. உற்பத்தியாளர்களிடம் இருந்து சபை பனம் பழத்திலிருந்து பனம் களியைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். இந்தப் பனம் களி அடுத்த போகம் வரைக்கும் பாதுகாக்கப்படும். அத்துடன் பனம் களியிலிருந்து பனம் பொருள்களை உற்பத்தி செய்யவும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. 50,000 லீற்றர் பனம் களியை வடக்கு மாகாண உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக்கால உள்நாட்டுப் போர் காரணமாகவும், நிலத் தேவைகள் காரணமாகவும் ஏராளமான பனைகள் அழிக்கப்பட்டுள்ளன. உள் நாட்டுப் போரினால் 25 இலட்சம் பனைகள் அழிந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. அண்மைக்காலக் கணக்கெடுப்பின்படி 30 இலட்சம் பனைகள் உள்ளதாகத் தெரிகிறது. உணவிலிப் பொருள்களை உற்பத்தி செய்தல், சந்தைப் படுத்துதல் ஆகியவற்றில் சிக்கல்கள் உள்ளன. மிகக் குறைந்த வருமானத்தையே நல்கும் நிலையில் பனைத்தொழில் உள்ளது. ஒரு புறம் பனை மான்மியம் மறுபுறம் பனைகள் அழிப்பு. வடக்கு மாகாணத்தின் அடையாளம், பொருளாதார வளம் பனை என்பதால் அதைப் பாதுகாக்க வேண்டும் எனக் கருதி அது தொடர்பான கண்காட்சி யாழ்ப்பாணத்தில் கிட்டுப் பூங்காவில் 'பனை வளம் தொடர்பான பனை மான்மியம்' எனும் தொனிப்பொருளில் பெரும் எடுப்பில் நடைபெற்றது. பனையை அழியவிடக் கூடாது, பனை சார்ந்த தொழில்களில் ஈடுபடுபவோரை ஊக்கப்படுத்த வேண்டும் என கண்காட்சியில் வலியுறுத்தப்பட்டது. அதேவேளை மறுபுறத்தில் பனைகள் அடியோடு தறிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்ற செயற்பாடுகளும் இடம் பெறுவதால் மக்கள் வேதனை தெரிவித்தனர்.

கிளிநொச்சி, மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சோரன்பற்று மற்றும் முல்லையடி கிராம அலுவலர் பிரிவுகளில் ஏராளமான பனை மரங்கள் தறிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதை அவதானிக்க முடிகின்றது. பனைகள் எமது சொத்து. பனைகளை அழிக்கும்போது இருக்கும் வேகம் அதனை நடுவதில் இல்லை. மரத்தில் ஏறுபவர்களின் எண்ணிக்கை தற்போது வெகுவாகக் குறைந்துள்ளது. மரம் ஏறுவதற்கு சிலரைப் பயிற்றுவிக்க வேண்டும் என நல்லூர் சங்கிலியன் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது பனை அபிவிருத்திச் சபை தலைவர் என்.இராசேந்திரன் தெரிவித்தார்.


ஐப்பசி மாதம் 2019 சுயாதீன இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியும் இணைந்து ஒரு இலட்சம் பனை விதைகள் வவுனியாவில் விதைக்கப்பட்டன. அழிந்துவரும் பனை வளத்தைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தால் 50 ஆயிரம் பனை விதைகள் நடும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தொழில் செய்பவர்கள் பனைகளில் இலகுவாக ஏறித் தொழில் செய்துவிட்டு இலகுவாக இறங்குவதற்காக பனை மரத்தில் ஏறும் இலகு ரக இயந்திரங்களை பனை அபிவிருத்திச்சபை யாழ்ப்பாண மாவட்டத்தில் அறிமுகம் செய்துள்ளது. வடக்கின் மறுவாழ்வுச் சீரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சின் உதவியுடன் பனை மரத்தில் ஏறும் இலகு இயந்திரங்கள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த இயந்திரங்களைக் கொண்டு சகல சங்கங்களும் தமது அங்கத்தவர்களுக்குப் பயிற்சி வழங்குவர். இவை யாவும் பனைத் தொழில் முன்னேற்றம் காண உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# ஆழியவளை தொடர் கட்டுரை

## யாழ்ப்பாணத்துக் கடலோரக் கிராமம் ஒன்றின் மரபும் மாற்றமும்



கந்தசாமி முத்துராஜா

**இயல் 03**

## சடங்குகள் நம்பிக்கைகள்

### 1. வாழ்க்கைவட்டச் சடங்கு

#### அ. பிறப்பு

1950களுக்கு முன்னர் இக்கிராமத்தில் குழந்தைகளைப் பெற்றெடுப்பது உள்ளூர் மருத்துவிச்சியின் உதவிகொண்டே நடைபெற்றது. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஓரிரு பெண்களே இதில் பிரபலம் பெற்றவர்களாக இருப்பர். பிள்ளைத்தாச்சிப் பெண் வயிற்றில் நோவு உணர்ந்ததும் தனது தாயார் அல்லது மாமியார் போன்ற உறவுப் பெண்களுக்கும், ஊர் மருத்துவிச்சிக்கும், கட்டாடிக்கும், கணவன் மூலம் அல்லது தனது வளர்ந்த பிள்ளைகள் மூலம் அல்லது அயலார் மூலம் செய்தி சொல்லி அனுப்புவாள். அவர்கள் வந்ததும் அடுப்படிவீடு கடுந்தறையாக இருந்தால், வீட்டினுள் ஒரு பகுதியில் மண்ணைக் கொட்டிப் பரத்துவர். அதற்கு மேல் பழைய சேலைகளைப் போட்டு மெத்தைபோல் மென்மையாக்கு வர். இந்த இருக்கைக்கு மேலே முகட்டுவளையில் பலமான ஒரு சேலையை முறுக்கிக்கட்டித் தொங்கவிடுவர்.

வயிற்றுநோக்காடு நீண்டுகொண்டே போனால் ஊரின் ஆயுள்வேதப் பரியாரியார் வரவழைக்கப்படுவார். அவர் மருந்து கொடுக்க, மருத்துவிச்சி கருமமாற்ற, பிள்ளைத்தாச்சி முகட்டுவளையில் தொங்கும் சேலையை, இருகைகளாலும் இறுகப்பற்றிக் கொண்டு குழந்தையைப் பெறுவாள். நஞ்சுக்கொடி விழாவிடில் மருத்துவிச்சி தனது திறமையினால் அக்கொடியை எடுத்து, எப்படியோ தாயையும் பிள்ளையையும் காப்பாற்றி விடுவாள். மிகமிக அரிதாக, நச்சுக்கொடி வெளியே எடுக்கமுடியாது போனமையால் உயிரிழந்த பெண்களும் உளர். அடுப்படிக்குள் காய்கறி வெட்டப் பயன்படுத்தும் சத்தகத்தினால் தொப்புழ்க் கொடியை வெட்டுவார். குழந்தை பிறந்தவுடன் சில்லறைக் காசைச் சீலைத் துண்டில் சுற்றித் தாயினதும் குழந்தையினதும் கைகளின் மணிக்கட்டில், கொத்திப் பேய்க்கு நேர்த்தி நேர்ந்து கட்டிவிடுவார். கொத்தி என்பது பழந்தமிழ்த் தெய்வமான கொற்றி ஆக இருத்தல் வேண்டுமென பேராசிரியர் கணபதிப்பிள்ளை கூறுவார் (தகவல் கா. சிவத்தம்பி).

குடிமக்களான வண்ணான் அல்லது வண்ணாத்தி வந்து, துடக்குச் சேலையை எடுத்துக்கொண்டு பிள்ளைபெற்றவள் உடுப்பதற்கான வெள்ளைச்சேலைகள் கொடுத்துச் செல்வார். பதினோராம்நாள் வரையும் இந்த மாற்றுச்சேலைக் கொடுப்பும் எடுப்பும் நடைபெறும். குழந்தையானது, தாய்ப்பால், கஞ்சி, கற்கண்டுத்தண்ணி, தேநீர் போன்ற வற்றைக் குடித்து வளரும்.



பெரும்பாலும் வீட்டின் முகட்டுவளையில் சேலையால் கட்டப்பட்ட ஏணையில் குழந்தையைத் தாலாட்டித் தூங்கவைப்பர். குழந்தை பெற்ற தாய்க்குப் பதினோராம் நாளில் எண்ணெய் முழுக்காட்டுவர். அன்று ஒடியல்பிட்டு, மீன்பிட்டு, குரக்கன் பிட்டு, சோறு, மரக்கறி, மீன்கறி, இறைச்சிக்கறி முதலியன சேர்த்து மச்சப்படையில் கொத்திப் பேய்க்குப் படைப்பர். வண்ணாத்திக்கும் ஊர்மருத்துவிச்சிக்கும் கொடுப்பர். பின்னர் நெருங்கிய உறவினர் ஒன்றுகூடி உண்பர். பதினொன்றுச் சோறு சாப்பிட்டவர்கள் குழந்தையின் முப்பத்தோராவது நாள்வரை கோயில்களுக்குள் செல்ல முடியாது. இவ்வழக்கத்தைத் துடக்குக் காத்தல் என்று கூறுவர்.

முப்பதாம்நாள் அம்பட்டர் பிள்ளை பிறந்த வீட்டுக்கு வந்து குழந்தையின் துடக்கு மயிரை மழிப்பார். அம்பட்டர் வருசக் கூலிக்குத்தான் குடும்பத்தினருக்கு மயிர் வெட்டுவது வழக்கம். ஆனால் துடக்கு மயிர் எடுப்பிலன்று பிரத்தியேகமான ஒரு சிறுதொகைப் பணத்தை வெற்றிலைத் தட்டத்தில் வைத்து அவருக்குக் கொடுப்பர். அத்துடன் அவருக்குத் தேனீரும் வெற்றிலையும் கொடுக்கப்படும்.

நாற்பத்திஓராம்நாள் குழந்தையைப் பேரன், பேத்தி மற்றும் உறவினருடன் தாய் தந்தையர் கோயிலுக்குக் கொண்டு செல்வர். அன்று, சிலர் தாம் வைத்திருந்த நேர்ந்தியின்படி கோயிலில் குழந்தையை விற்று வாங்குவர். சிலர் அன்றே குழந்தைக்குப் பெயரும் வைப்பர். முந்திய காலத்தில் பிள்ளையின் பதிவு இதன் பின்னரே நடைபெறும். இக்காலத்தில் பெரும்பாலும் பிரசவ ஆஸ்பத்திரிகளிலேயே குழந்தைப்பேறு நடைபெறும். ஆழியவளையைச் சேர்ந்த கர்ப்பிணிகள் பெரும்பாலும் பளை ஆஸ்பத்திரிக்கே செல்வர். இப்பொழுதும் கூடச் சிலவேளைகளில் வீட்டிலேயே பிரசவம் நடைபெறுவதுண்டு. ஆஸ்பத்திரியில் பிறந்த குழந்தைகளின் பதிவு ஆஸ்பத்திரியிலேயே நடைபெறும். வீட்டிற் பிறந்த குழந்தையின் காது பூசாரியால் குத்தப்படும். ஆண்பெண் இருபாற் குழந்தைகட்கும் 1950-களுக்கு முன்னர் காது குத்துவது வழக்கமாக இருந்தது. குழந்தையைக் "கோயிலுக்குக் கொண்டுபோதல்" என்பதுதான் இவ்வூரின் நடைமுறை 'தொட்டிலில் போடும்' மரபு இங்கு வழக்கில் இல்லை.

வளர்ந்துவரும் பிள்ளை, ஐந்துவயதில் பாடசாலைக்குச் செல்லும். ஆண்பிள்ளைகள் எட்டு, ஒன்பது வயதுகளில், பகுதி நேரமாக மீன்பிடித் தொழில்மூலம் உழைக்கத் தொடங்கிவிடுவர். பெண்களும் அவ்வயதுகளில், வீட்டுவேலைகளில் தாயாருக்கும் மூத்த சகோதரிகளுக்கும் உதவிசெய்யத் தொடங்குவர். தமது தாய்மார் சந்தைக்குச் சென்று திரும்பும் வரையில் இளைய சகோதரங்களைப் பராமரிப்பர். சமையல் செய்வர். வீடு வளவைக் கூட்டிப்பெருக்கித் தூய்மைப் படுத்தி வைப்பர்.


#### ஆ. பூப்பு

பெண்பிள்ளைக்குச் சாமத்தியம் கண்டதும் அவரை அடுக்களையின் உள்ளே ஒரு மூலையில், குறிப்பாக அடுக்களையின் கதவாகப் பயன்படும் அடுக்களை வாசற்படலை திறந்து மூடும் மறைவில் இருத்துவர். ஒரு பெண் பூப்பெய்துவதை 'சாமத்தியப்படுதல்' 'பெரிய பிள்ளை' ஆதல் 'சமைஞ்சு" இருத்தல் 'வயதுக்கு வருதல்' 'புத்தி அறிதல்' என்ற தொடர்களாலும் குறிப்பிடுவர். பெண்பிள்ளை சாமத்தியப்பட்டது. கட்டாடிக்கும், உறவுக்காரருக்கும் செய்தி சொல்லி அனுப்பி வரவழைப்பர். அநேகமாக இரவு ஏழு மணியளவில் சாமத்தியப் பெண்ணுக்கு தலை முழுக்கு வார்ப்பர். சாமத்தியம் கண்ட பெண்ணுக்கு சாமத்திய முழுக்கு, பதினொன்று முழுக்கு, முப்பத்தொன்று முழுக்கு என மூன்று கட்டமாக நீர்முழுக்கு நடத்தப்படும். இதில் சாமத்தியம் கண்ட அன்று செய்யப்படுவது 'தலை முழுக்கு' எனப்படும்.

முதியபெண்கள் ஆலாத்துப்பாடலைச் செம்பில் ஊதி, ஒலிஎழுப்பி இனிமையாகப் பாடுவர். தலைமுழுக்க நீராட்டிய பெண்ணுக்கு வண்ணாத்தி கொண்டுவரும் வெள்ளைப் புடவையை உடுத்தி, மீண்டும் படலைக்குப் பின்னால் இருத்துவர். தற்கால வழக்கம்போல் அன்று புதிய புடவை உடுத்துவதில்லை. அதன்பின்னர் கற்கண்டுப்புக்கை, பாற்புக்கை என்பன வற்றை அங்கு கூடியுள்ள எல்லோர்க் கும் பரிமாறுவர். பதினொன்று வரையும் வண்ணாத்தி மாற்றுத்துணி கொடுத்து எடுத்துச் செல்வார். பதினோரம்நாள் பெண் அடுப்படியால் வெளியேறி வளவுக்குள் உலாவுவார்.

முப்பதுநாள் மட்டும் சத்துணவு கொடுத்துப் பெண்ணைப் பிரத்தியேகமாகக் கவனிப்பர். உணவுகளில் ஒன்றாக நல்லெண்ணெய்க்குள் முட்டை அடித்துத் தினமும் குடிக்கக் கொடுப்பர். முப்பத்தோராம் நாள் உறவுக்காரப் பெண்களும் முதியபெண்களும் ஒன்றுகூடிச் சாமத்தியப் பெண்ணுக்கு வீட்டில் துடக்குக்கழிப்புச் செய்வர். இச்சடங்குகள் பெரும்பாலும் நெருங்கிய உறவினர் மட்டில்தான் நடைபெறும். வண்ணாத்திக்குப் புதிய புடவையும் பணமும் கொடுப்பர். வண்ணாத்தி இல்லாதவிடத்து வண்ணான் இச்செயற்பாட்டில் ஈடுபடுவார். அதன் பின்னர் பருவமடைந்த பெண் பாடசாலைக்குச் செல்வதற்கும், ஊருக்குள் நடமாடுவதற்கும் அனுமதிக்கப்படுவார். பெரும்பாலும் அக்காலத்தில் பெண் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்புடன்

(தொடர்ச்சி 21ஆம் பக்கம்...)



# ஆழியவளை...

## 18ஆம் பக்கத்தொடர்ச்சி

கல்வியை நிறுத்திவிடுவர். அதன்பின் வீட்டிலிருந்து தாய்க்கு உதவியாக வாழ்ந்து, பதினாறு வயதின் முன் பின்னாகத் திருமண வாழ்வில் புகுந்து விடுவர். பெண்பிள்ளைகளைக் கலியாணம் முடித்துக் கொடுப்பதைப் பேச்சு வழக்கில்



'கரைசேர்த்தல்' என்று இவ்வூரில் கூறுவர். அக்காலத்தில், ஆணின் வளர்ச்சியில், ஒருசில ஆண்பிள்ளைகளைத் தவிரப் பெரும்பாலானோர் மூன்றாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திவிடுவர். இதற்கு முக்கிய காரணம் ஊரிலுள்ள தொழில் வாய்ப்பும் குடும்பத்தின் வறுமையும் எனலாம். இங்கு, ஏழுவயதிலிருந்து ஆண்கள் தொழில் பழகத் தொடங்கி விடுவர். பதினான்கு வயதுகளில் கரைவலை, அரிவிவெட்டு, வீடுகட்டுதல், வேலியடைத்தல், கிணறு வெட்டுதல், வீச்சு முதலிய தொழில்களில் தேர்ச்சியும் திறமையும் பெற்றுப் 'பொறுத்த இளந்தாரி' என்ற பெயரெடுத்துவிடுவர். கரைவலை வள்ளத்துத் தண்டு (துடுப்பு) வலிக்கும்போது, அதை முறிக்கக்கூடிய மூச்சுக்கொண்ட பலசாலிகளாக மாறி விடுவர். அவர்களது கை, கால், தோள், நெஞ்சு எல்லாம் திரட்சி பெற்று நேர்த்தியுடன் காணப்படும். பதினாறு வயதுகளில் திருமணம் செய்துவிடுவர். (திருமண வயது 14-20). அதன்பின்னர் 'பொறுப்பான குடும்பத்தலைவன்' எனப் பேர்துலங்கத்தக்க வகையில், 'தனிவளவு' அடைத்துத் தனிக்குடித்தனம் நடத்துவர்.

வளரும் ஒரு பையன் முதன் முதல் தொழிலுக்குச் செல்லும் நாளை நாட் கரைவலை இழுத்தல், நாள் அரிவி வெட்டுதல் என்று கூறுவர். ஆண் பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி காரணமாக இந்த வழக்குகள் தற்போது பெரிதும் குறைந்துவிட்டன. ஆயினும் பதினான்கு வயது ஆண் பிள்ளைகள் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்பத் தொழிலுக்கு உதவி செய்வர்.

தொடரும்...)

# மாண்டு மடிந்த போர்வீரருக்காய்!



11.11.2020 தேசம் காக்க உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவு தினம்


எப்படியும் வாழலாமென எண்ணுதல்
ஏற்புடைய வாழ்வாய் ஆகிடுமா?
எப்படியும் வாழலாமென எண்ணி
எமது முன்னோர் வாழ்ந்ததுண்மை
இப்படியும் வாழலாமென கொள்ளல்
இனிமையுள வாழ்வாக அமைவதில்லை
இப்படித்தான் வாழவேண்டுமெனக் கருதி
இயல்பாக வாழ்பவரே கனடியர்கள்!

இரக்கசிந்தை கொண்ட இந்தக் கனடியர்கள்
இயற்கையுடன் ஒன்றிவாழ விரும்புவோரே
கரம் கோப்பார் வலிமையுடன் ஒற்றுமையாய்
கருணை மனம் கொண்டதால் பிறர்க்குதவி
நேரத்தை நேசிக்கும் குணம் கொண்டார்
நேசத்தை வளர்க்கின்ற மனம் கொண்டார்
பாரமென வாழ்க்கையினை கொள்ளாமல்
பக்குவமாய் வாழுகின்ற நிலைபெற்றார்!

மனிதரை மட்டுமா நேசிப்பார்கள்?
மாண்புடன் விலங்கினையும் நேசிப்பாரே
பனி கொட்டும் நாட்டினியே வாழ்ந்தாலும்
பாசத்தை நெஞ்சினுள்ளே புதைத்திருப்பார்
புனிதமுள்ள உறவுவான அன்னைக்காக
புரிதலுடன் 'அன்னையர் தினம்' இன்னும்
கனிவுடனே தந்தைக்காக 'தந்தையர் தினம்'
காதலுக்காக ஒரு 'காதலர் தினம்'!

நன்றிசொல்ல ஒருதினம் தாம்விரும்பும்
நண்பருக்காய் ஒருதினம் உயர்
குன்றிலிடு தீபமாயொளிரும் தம்முடைய
குடும்பத்திற்காய் ஒருதினம் இங்கு
என்றுமே உழைத்து வாழும்தொழிலாளிக்காய்
ஏற்றம்மிகு 'தொழிலாளர் தினம்' போரில்
வென்று தேசம்காக்க உயிர் நீத்தஇராணுவ
வீரருக்காய் ஒருதினம் 'நினைவு தினம்'

இறந்ததம் முன்னோருக்காய் ஒருதினம்
இதயத்தை மகிழ்விக்கும் புத்தாண்டுக்காய்
மறக்காமல் இருதினங்கள் ஒதுக்கிவைத்தார்
மாண்டுமடிந்த போர்வீரருக்கான தினத்தினிலே
சிறப்பான நினைவுகளை மீட்டெடுக்குமிவர்
சிகரத்தைத் தொடும் நிலைபெற்றார்
அறத்தின் வழி நின்றே அமைதிகாக்கும்
அற்புத மனிதரிந்தக் கனடியர்கள்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# மாற்றம் நல்லது

உங்கள் மனசுக்கு சில விடயங்கள் சரியில்லை என்று நினைகிறீர்களா? குடும்பத்தோடு நேரம் செலவழிக்க முடியவில்லை, நடைபயிற்சி தொடங்கினோம்; ஆனால் தொடர முடியவில்லை, நல்ல புத்தகம் வாங்கினோம்; ஆனால் படிக்க முடியவில்லை, வேறு வேலை தேடுகிறோம்; கிடைக்கவில்லை, கல்யாணத்துக்குப் பெண்ணோ / பையனோ; கிடைக்கவில்லை, புகை/மது பழக்கத்தை நிறுத்த முடியவில்லை, இப்படி ஏதாவதொரு 'இல்லை' நமக்கு எப்போதுமே உண்டு.


இல்லைகளை இல்லாமல் ஆக்க நீங்கள் மனதளவில் முதலில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். ஒரு புகழ்பெற்ற மனிதரின் அறிவுரை உங்களுக்கு மிகவும் உதவும்.

கடந்த 33 வருடங்களாக; தினமும் காலையில் கண்ணாடியை பார்த்து என்னை நானே கேட்டுக்கொள்வது "இந்த நாள் உன்னுடைய கடைசி நாளாக இருந்தால் இன்று செய்துகொண்டு இருப்பதை தொடர்ந்து செய்வாயா?" எப்போதெல்லாம் 'இல்லை' என்ற பதில் தொடர்ந்து சில நாட்கள் வருகிறதோ, அப்போதே எனக்குத் தெரியும் நான் எதையாவது மாற்ற வேண்டும் என்று.

\- ஸ்ரீவ் ஜொப்ஸ்"

இவர் போல் நாம் இருக்க முடியுமோ முடியாதோ. நாமும் சிலவற்றை மாற்ற முயலலாம். பல 'இல்லை'களை தவிர்த்து, சில சின்ன 'இல்லை'களோடு வாழலாம்.















# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5